janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2024 ஜனவரி 28 - பிப்ரவரி 03 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 43




# பகவான் ராமனின் நிழலில் பதுங்குகிற மோடி!

## அமர்ஜித் கவுர் சாடல்

**லயோலா கல்லூரியும் ஏஐடியுசியும் இணைந்து “இந்திய தொழிலாளர்களின் எதிர்காலம்” என்ற தலைப்பில் ஜனவரி 22 23 தேதிகளில் ஒரு கருத்தரங்கத்தை லயோலா கல்லூரியில் நடத்தின. அதனை துவக்கி வைக்க ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் சென்னை வந்திருந்தார்.**





ராமர் பிரதிஷ்டையில் நிஜப் பிரதமர் மோகன் பகவத்தும், நிழல் பிரதமர் நரேந்திர மோடியும்

அன்று மதியம் 2 மணிக்கு தமிழ்நாடு ஏஐடியூசி கருத்தரங்கக் கூடத்தில், ஊழியர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு அகில இந்திய வங்கி ஊழியர் சம்பந்தமான பொதுச் செயலாளர் சி ஹெச் வெங்கடாசலம் தலைமையேற்றார்.

கூட்டத்தில் அமர்ஜித் கவுர் பேசியதன் சுருக்கம் வருமாறு;

**கிரஹாம் ஸ்டேன்ஸ் பாதிரியார், அவரது இரு மகன்களோடு உயிரோடு கொளுத்தப்பட்ட நாள் ஜனவரி 22. அது நடந்தது 2003 ஆம் ஆண்டு.**

2024 ஜனவரி 22, குழந்தை ராமரின் சிலை நிறுவப்படுகிறது. இன்று ஒன்றிய அரசு, இந்தியா முழுமையும் மதியம் 2:30 மணி வரை விடுமுறை அளித்திருக்கிறது. வங்கிகளுக்கும் விடுமுறை. மருத்துவமனைகளுக்கும் விடுமுறை.

இந்த நேரத்தில் மருத்துவ உதவி தேவைப்படுபவர்கள், அது கிடைக்காமல் நேரடியாக ராமனின் திருவடிகளுக்குச் சென்று சேரலாம். அது மட்டுமல்ல, இந்த நாளில் இறந்து விட்டாலும், புதைக்கவோ எரிக்கவோ கூடாது என்றும் சில மாநிலங்களில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது!

சங்கராச்சாரிகளே, இது சிலையை நிறுவுவதற்கு உகந்த நேரம் அல்ல என்று கூறி இருக்கிறார்கள். இந்து மத நம்பிக்கைகளா பாலராமர் சிலையை நிறுவுகிறது? இது மதவெறியினால் அதிகாரத்தை பெறுகிற உத்தி. இது ராமனின் விழா அல்ல; மோடியின் விழா.

மோடி, விரக்தியிலும் பதட்டத்திலும் இருக்கிறார். அவர் கால் பதித்திருக்கும் பூமி நழுவிக் கொண்டிருக்கிறது. மீண்டும் அதிகாரத்தை பெறுமளவுக்கு நற்செயல்கள் எதையும், தான் செய்யவில்லை என்பது அவருக்கே தெரியும்.

எனவேதான் தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாக, ராமர் சிலையை நிறுவ வேண்டிய கட்டாயம்.

அதே உத்தரப் பிரதேசத்தில் இருந்து இஸ்ரேலுக்கு இந்திய தொழிலாளர்கள் அனுப்பப்பட இருக்கிறார்கள். அதற்கான விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டு கொண்டு இருக்கின்றன.

உக்ரைனில் போர் தொடங்கிய போது, அங்கிருந்த இந்திய தொழிலாளர்களையும் மாணவர்களையும் இந்தியாவுக்கு அழைத்து வந்தோம். ஆனால் உக்கிரமான போர் நடந்து கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு இந்திய தொழிலாளர்களை அனுப்பி வைக்கப் போகிறோம்!

இதில் அவர்களுக்கு வேலை தேடி தந்து விட்டதாக மோடி, யோகி ஆதித்யநாத் பெருமை அடித்துக்கொள்வதுதான் வேடிக்கை!.

உத்தர்காண்ட்டில், 41 தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் மாட்டிக் கொண்டார்கள். ஒன்றிய அரசும், அது கைகோர்த்துக் கொண்டிருக்கும் கார்ப்பரேட்டுகளும், கொண்டு வந்த எந்திரங்கள் எல்லாம் இயங்கும்போதே உடைந்து பழுதாகி விட்டன.

சரிந்து மூடி இருந்த அந்த மண் குவியலுக்குள், கிடைமட்டமாக தொழிலாளர்கள் நுழைந்து, மண்ணைக் கிளறி அகற்றிக் கொண்டே முன்னேறி, தங்கள் உயிரைப் பணயம் வைத்து 41 தொழிலாளர்களை மீட்டனர். இல்லையெனில் அந்த நாற்பத்தி ஒருவரும் உயிரோடு புதைந்து போய் இருப்பார்கள்.

இந்தப் பெருமை உயிரைப் பணயம் வைத்த அந்த தொழிலாளருக்கு சென்று சேர வேண்டும். ஆனால் அதிலும் மோடியும் முதலமைச்சருமே பெருமை கொண்டாடிக் கொண்டார்கள்.

கொரோனா பெரும் தொற்றுக் காலத்தில், ஆக்சிஜனுக்கும் மருந்துகளுக்கும் தட்டுப்பாட்டை உருவாக்கியும், தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை என்ற பெயரிலும். நாளொன்றுக்கு 500 கோடி ரூபாய் வீதம் கார்ப்பரேட்டுகள் கொள்ளை அடித்து தங்கள் வருவாயை இரு மடங்காக்கிக் கொண்டனர்.

ஆனால் மருத்துவமனைகளிலும், உள்ளாட்சிப் பணிகளிலும், பொதுப் போக்குவரத்திலும் அரசுத் துறைப் பணியாளர்களே, தங்களை அர்ப்பணித்து இந்திய நாட்டு மக்களை மீட்டார்கள்.

இஸ்ரேலுக்கு செல்லும் பணியாளர்களுக்கு என்ன சம்பளம்? காப்பீடு உண்டா? என்ற எந்த விவரமும் கிடையாது.

இருந்தும் ஏன் இஸ்ரேலுக்கு செல்ல ஒப்புக் கொள்கிறீர்கள் என்று, ஒரு தொலைக்காட்சி அந்தத் தொழிலாளர்களைப் பேட்டி கண்டது.

“இங்கு வேலை இல்லாமல், வருவாய் இல்லாமல், பட்டினியால் தினந்தோறும் செத்துக் கொண்டிருக்கிறோம். அங்கு போனால் ஒரே நாளில் செத்து விடலாம்” என்று ஒரு தொழிலாளி பதில் சொன்னார்.

உயிருக்கு பாதுகாப்பற்ற ஒரு வேலைக்கு அனுப்ப, தன் மகனை / மகளை அனுப்ப, அம்மாவும் அப்பாவும் உடன்படவே மாட்டார்கள்.

இந்த நாட்டின் அரசாங்கமும் குடிமக்களுக்குப் பெற்றோர்கள் தானே! ஆனால் உயிராபத்து விளைவிக்கிற வேலைக்கு போ என்று இந்த அரசாங்கம் ஆசை வார்த்தை காட்டுகிறது. இதற்கு மோடி வெட்கப்பட வேண்டாமா?

நம் நாட்டு தொழிலாளர்களின் உயிரை பணயம் வைப்பது மட்டுமா? அங்கு இவர்களை வேலைக்கு அனுப்புவது இஸ்ரேலில் தங்கி இதே வேலையை செய்து கொண்டிருக்கும் பாலஸ்தீனியர்களை அங்கிருந்து விரட்டுவதற்கு தானே! அவர்களை காசாவுக்கு அனுப்பி அங்கு படுகொலை செய்வதற்குத் தானே?

நான் ஒரு இந்தியன். இந்த நாட்டில் பிறந்ததற்காக பெருமைப்படுகிறோம்.

ஜெர்மனிக்கு சென்று பாருங்கள் அங்கு ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில், கூட்டம் கூட்டமாக மக்களை அனுப்பி, விஷவாயு செலுத்தி கொலை செய்த படுகுழிகள் இன்றும் இருக்கின்றன. அவற்றைப் பார்க்கும் நாம் மட்டுமல்ல, ஜெர்மனி நாட்டு மக்களே வெட்கித் தலை குனிகிறார்கள்.

இதே போன்ற ஒரு தலைகுனிவு இந்தியாவுக்குத் தேவைதானா? இந்தச் செயலுக்காக நமது சந்ததியும் அல்லவா தலைகுனிந்து நிற்க வேண்டும்!

வேலையும், கல்வியும், மருத்துவ வசதியும் செய்து கொடுக்க முடியாத மோடியின் வெட்கங்கெட்ட அரசாங்கம், இன்று பகவான் ராமனின் முதுகுக்கு பின்னால் ஒளிந்து கொள்ள முயற்சிக்கிறது.

இந்த அடாவடித்தனத்தை எதிர்த்து, இந்திய விவசாயிகளும் தொழிலாளர்களும் ஜனவரி 16ஆம் தேதி அன்று டிராக்டர் வாகனப் பேரணிகளை நடத்தி மோடி அரசுக்கு கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

பிப்ரவரி 16ஆம் தேதி அன்று தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தமும். கிராமங்களில் முழு அடைப்பும் நடத்தப்பட உள்ளது. இது விவசாயிகள், தொழிலாளர்களின் கோரிக்கை மட்டும் அல்ல. இந்திய நாட்டைப் பேரழிவிலிருந்து மீட்டெடுப்பதற்காக நடத்தப்படும் போராட்டம்.

இந்த இயக்கத்தில் இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள், கலைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடி வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

**தமிழில் டி எம் மூர்த்தி**

## அத்வானி, அமித்ஷா, ராஜ்நாத்சிங், நிர்மலா சீதாராமன்?

முன்னாள் பிரதமர் எச்.டி.தேவகவுடா, ஆர்எஸ்எஸ் மூத்த தலைவர் சுனில் அம்பேத்கர், டிஆர்டிஒ தலைவர் டாக்டர் சதீஸ் ரெட்டி, முன்னாள் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, பாபாராம்தேவ், தொழிலதிபர்கள் முகேஷ் அம்பானி, அனில் அம்பானி, சுனில் பாரதி மிட்டல், நடிகர்கள் அமிதாப் பச்சன், கங்கனா ரணாவத், ரஜினிகாந்த், விவேக் ஓபராய், தனுஷ், ஹேமமாலினி, மாதுரி தீக்ஷித், ரன்பீர் கபூர், ஆலியா பட், சிரஞ்சீவி, ராம் சரண், அனுபம் கெர், இந்தி கவிஞர் குமார் விஸ்வாஸ், பாடகர் சோனு நிகாம், முன்னாள் இன்னாள் விளையாட்டு வீரர்களான சச்சின் டெண்டுல்கர், மிதாலி ராஜ், சாய்னா நேவால், அணில் கும்ப்ளே உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர். இவர்கள் கோவில் மண்டபத்தில் அமர்ந்து கும்பாபிஷேக விழாவை பார்வையிட்டனர்.

- பாபர் மசூதி இடிப்பை முன்னின்று நடத்திய கர சேவை நாயகனும், முன்னாள் துணை பிரதமருமான எல்.கே.அத்வானி ராமர் கோவில் திறப்பு விழாவில் பங்கேற்கவில்லை. இவர் பங்கேற்காததற்கான காரணம் தொடர்பாக வெளிப்படையாக எந்த தகவலும் வெளியாகவில்லை.
- இதேபோல பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பரும், அவரது வலதுகரமுமான ஒன்றிய உள்துறை அமித்ஷாவும் திறப்பு விழாவில் பங்கேற்காமல் புதுதில்லியில் உள்ள பிர்லா கோவிலில் தனது குடும்பத்துடன் ராமர் கோவில் பிரதிஷ்டையை தொலைக்காட்சியில் நேரலையாக பார்த்தார்.
- பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரும் பங்கேற்கவில்லை.
- சிவசேனாவை உடைத்து மகாராஷ்டிர முதல்வராக உள்ள ஏக்நாத் ஷிண்டே, தேசியவாத காங்கிரஸ் கட்சியை உடைத்து பாஜக கூட்டணியில் இணைந்த மகாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் உட்பட பல்வேறு முக்கிய தலைவர்களும் பங்கேற்கவில்லை.

ஜனசக்தி

கட்சிக் கடிதம்

# மோடி மஸ்தான்



போர்க்குணமிக்க தோழர்களே!

**நமது நாட்டில் நடைபெற்று வரும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும், இவைகளில் உள்ள வஞ்சகம் நிறைந்திட்ட சூழ்ச்சிகள் குறித்தும் நாம் மிகுந்த விழிப்புணர்வுடன் இருந்திடல் வேண்டும்.**

நாம் விழிப்புடன் இருந்தால் தான் மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட முடியும்.

மக்களிடத்தில் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதின் மூலமாக அரசியல் மாற்றங்களை உருவாக்க முடியும்!

இன்று நாட்டை ஆளும் ஆர் எஸ் எஸ் அமைப்பின் பிரதிநிதியாக செயல்பட்டு வரும் பாஜகவும், பிரதமர் மோடியும் மேற்கொண்டு வரும் சூழ்ச்சிகள் நிறைந்திட்ட அருவருக்கத்தக்க அரசியல் என்பதனை நாடு இதுவரை கண்டதில்லை.

ராமாயணம், மகாபாரதம் எனும் இருபெரும் இதிகாசங்கள் நாட்டு மக்களிடையே நீண்ட நெடுங்காலமாக வாசிப்பில் உள்ளவை அல்லது திரும்ப திரும்ப திரைப்படங்களாக, தொலைக்காட்சிகளில் தொடராக, கோவில்களில் தொடர் சொற்பொழிவாக சொல்லப்பட்டு வருகின்றன.

பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு கதையாகவும் சொல்லி வருகின்றனர்.

சுவாரசியமிக்க கதைகளைக் கேட்பதில் மகிழ்ச்சியடைவோர் உண்டு. படிப்பதால், திரைப்படம் பார்ப்பதால், கதைகள் கேட்பதால் கதாபாத்திரத்தில் உள்ள கதாநாயகர்களை கடவுளாக ஏற்க வேண்டும் என்பது பொருள் அல்ல.

கதாநாயகர்களை கடவுளாக ஏற்க வேண்டுமெனில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர் உட்பட அனைவரும் கடவுளாகி விடுவார்கள்.

இவர்களுக்கு எல்லாம் கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்வதிலேயே நமது காலம் முடிந்துவிடும்.

இராமாயணக் கதையை எழுதிய ராஜாஜி அவர்கள், வால்மீகி எழுதிய ராமாயணத்தில், இராமனை சிறந்த அரசனாகவும் போர் வீரனாகவும் சித்தரித்தார்.

நம்முடைய கம்பன் தான் இராமனை வெறும் அரசனாக மட்டும் குறிப்பிடக் கூடாது என்று கடவுளாக சித்தரித்தார் என்று தனது முன்னுரையில் ராஜாஜி குறிப்பிடுகிறார்.

ஆனால் இன்று பிரதமர் மோடியும், அவரது அடிவருடிகளும் அரசியலில் தப்பிப் பிழைக்க வேண்டும் என்பதற்காக ராமனிடம் தஞ்சமடைந்துள்ளனர்.

மக்களிடம் உள்ள மத நம்பிக்கை மற்றும் கடவுள் நம்பிக்கையை தனக்கு சாதகமாக பயன்படுத்தி தப்பி பிழைக்க பார்க்கின்றார் மோடி.

பாபர் மசூதியை இடித்து தரைமட்டமாக்கிய குற்ற உணர்வு சிறிதும் அற்ற ஒரு வன்முறைக் கூட்டம் பாஜக என்பதனை நாடு மட்டுமல்ல, உலகமே நன்கு அறியும்.

இப்படிப்பட்டவர்களிடத்தில் நேர்மை குறித்து நாம் எதிர்பார்த்தால், நம்முடைய குற்றமேயன்றி அவர் குற்றமல்ல.

தமிழ்நாட்டில் பாஜகவினர் இந்து சமய அறநிலையத்துறையே கூடாது என்று கூச்சல் போடுகின்றனர். பாஜக ஆட்சிக்கு வந்தால், முதல் கையெழுத்து அறநிலையத்துறையை ஒழிப்பதுதான் தனது முதல் வேலை என்று அண்ணாமலை பிதற்றுகிறார்.

ஆலயங்களில் அரசியல்வாதிகள் யாரும் தர்மகர்த்தாக்களாக இருக்கக் கூடாது என்கிறார்.

பழனி முருகன் கோவிலில் நடைபெற்ற கும்பாபிஷேகம் நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு சேகர்பாபு பங்கேற்றதை மிகக் கடுமையாக அண்ணாமலை விமர்சித்தார்.

பிராமணர்கள் மட்டுமே இருக்க வேண்டிய இடத்தில் சூத்திரன் சேகர் பாபுவிற்கு என்ன வேலை? என்று வினா எழுப்பியது மட்டுமல்ல தீட்டுப்பட்டு விட்டது. ஆகவே மறு கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென போர்க்குரல் எழுப்பினார்.




தற்போது பாஜகவினர் படை திரண்டு அயோத்திக்குச் செல்வது அயோக்கியத்தனம் இல்லையா? அமைச்சர் சேகர்பாபு சூத்திரன் என்றால், பிரதமர் மோடி யார்?

அக்ரகாரத்தில் வாழும் ஐயர் வீட்டு பிள்ளையா? அல்லது ஐயங்கார் வீட்டு பிள்ளையா? வட கலையைச் சேர்ந்தவரா? தென் கலையை சேர்ந்தவரா?

ஜனவரி 22 ஆம் நாள் நல்ல நாள் எனத் தீர்மானித்து அன்று 12:30 மணிக்கு நடைபெற்ற ராமர் கோவில் திறப்பு நிகழ்ச்சிக்கு ஒன்றிய அரசு அலுவலகங்களுக்கு அரை நாள் விடுமுறை விடப்பட்டுள்ளது.

இது இதுவரை நடந்திராத சம்பவம். ஒரு கோவிலின் கும்பாபிஷேகம் காண விரும்பிய மக்கள், கடவுள் நம்பிக்கை உள்ள மக்கள் அவர்களாக விரும்பி செல்வது வழக்கம்.

அதற்கு ஏன் ஒட்டுமொத்தமாக நாடு முழுவதிலும் விடுமுறை அளிக்கிட வேண்டும்?

ராமனுக்கு கும்பாபிஷேகம் என்றால் அதற்கு ஏன் அஞ்சல் தலை வெளியிட வேண்டும்?

பிற மத ஆலயங்களின், மசூதிகளின் திறப்பு விழாவிற்கு அஞ்சல் தலை வெளியிடப்படுமா?

மோடி ஊர், ஊராகச் செல்வார், அங்குள்ள ஆலயங்களில் எல்லாம் வழிபடுவார். இந்த கூத்தெல்லாம் யாரை ஏமாற்ற!

அரசு செலவில் தனி விமானத்தில் நாடு முழுவதும் சுற்றித் திரிந்து ஒவ்வொரு கோயிலாகச் சென்று, ஆன்மீகம் என்ற பெயரால் அரசியல் பிரச்சாரம் செய்து, நாட்டு மக்களை ஏமாற்ற எந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது?

மதச் சார்பற்ற நாட்டின் பிரதமர் அந்தக் கொள்கைக்கு விரோதமாக, மதச்சார்பு பிரச்சாரம் செய்யும் இவர் நாட்டின் பிரதமரா? அல்லது மத போதகரா?

காவி உடை தரித்து, கழுத்தில் உத்திராட்ச மாலை அணிந்து அணிந்து கொண்டு, நெற்றி நிரம்ப விபூதி பட்டையடித்து, நடு மத்தியில் சந்தனப் பொட்டும், அதன் நடுவே குங்குமப் பொட்டும் இட்டுக்கொண்டோ அல்லது திருநாமம் தரித்துக் கொண்டோ கையில் ஜால்ராவும் எடுத்துக்கொண்டு, ராமா.. ராமா.. என்று ஜபித்துக்கொண்டு நாட்டில் வலம் வருவதில் ஆட்சேபனை இல்லை.

ஆனால் நாட்டின் பிரதமராக இருந்து கொண்டு இத்தகைய வேடங்களை போடக் கூடாது என்பதே நாம் பிரதமருக்கு விடுக்கும் வேண்டுகோளாகும்.

உண்மையான இராம பக்தரான தேசப்பிதாவை சுட்டுக்கொன்று கொலை செய்துவிட்டு, மோடி கும்பல் தங்களை ராம பக்தனாக காட்டி உண்மையான பக்தர்களை எல்லாம் கேலி செய்து கொண்டிருக்கின்றது.

இராமர் கோவில் திறப்பு விழாவை இரட்டை எஞ்சின்கள் (ஒன்றிய அரசு, உத்தரபிரதேச அரசு) சேர்ந்து செய்கின்றன.

நாளேடுகளில் முழுப் பக்க விளம்பரம், தொலைக்காட்சிகளில் விளம்பரம் என நாடாளுமன்ற திறப்பு விழாவிற்கு கூட இல்லாத விளம்பரம்.

இத்தனை களேபரங்களும் எதற்காக நடைபெறுகின்றது?

கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் 436 இடங்களில் போட்டியிட்டு, 37.7 சதவீத வாக்குகளை தான் பெற்றது.

ஆனால் 303 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று, பெரும்பான்மை அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மிகக் குறைவானது.

தற்போது நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முன்னைக்காட்டிலும் அதிக இடங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்று மூன்றாம் முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்பது அவர்களின் கனவு.

கனவு காண்பது அவரவர் உரிமை, அதனைப் பறித்திட பிறருக்கு உரிமை இல்லை.

ஆனால் கனவு மட்டும் கண்டால் போதுமா? பத்தாண்டு காலம் தொடர்ந்து ஆட்சி பொறுப்பில் இருந்த மோடி அரசு நாட்டு மக்களுக்கு என்ன செய்தது என்ற வினாவிற்கு விடை இல்லை.

2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் மக்களுக்கு அளித்திட்ட வாக்குறுதிகள் என்னவாயிற்று?

*ஆண்டுக்கு 2 கோடிப் பேருக்கு வேலை

*வெளிநாட்டில் உள்ள கறுப்புப்பணம் மீட்பு

*ஒவ்வொரு குடிமகனுக்கும் வங்கிக் கணக்கில் ரூ.15 லட்சம் செலுத்தப்படும்.

*விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும்

*வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் குழு பரிந்துரைகள் நிறைவேற்றப்படும்.

என்பன போன்ற எண்ணற்ற வாக்குறுதிகள் என்னவாயிற்று?

வாக்குறுதிகளில் ஒன்றைக் கூட நிறைவேற்றாமல், தான் அளித்திட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் மக்கள் மறந்துவிட வேண்டும் என்று, ராமா.. ராமா.. என்று முழங்கினால் வாக்களித்த மக்களின் வாயில் மண்ணைப் போட்டு விடலாம் என்ற நினைப்பா?

மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். நல்ல நினைவாற்றலைக் கொண்டவர்கள் தான். காலம் கனிந்து வரும் என்று காத்திருக்கின்றார்கள். தங்களின் மௌனப் புரட்சியின் மூலம் தங்களுக்கு எதிரான, மோடி ஆட்சிக்கு எதிரான தண்டனையை வழங்க காத்திருக்கின்றார்கள்.

சென்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அமைந்தது போன்று பிற மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிடவில்லை.

தனித்தனியாக களம் கண்டார்கள். வகுப்புவாத பேரபாயத்துக்கு எதிரான வாக்குகளை ஒருங்கிணைக்காமல் பிரித்தனர்.

அதன் விளைவு குறைவான வாக்குகளைப் பெற்ற பாஜக அதிக இடங்களில் வெற்றி பெற்று அதிகாரத்திற்கு வந்தது.

தனித்த நிலைப்பாட்டின் அபாயத்தை, ஆபத்தை தங்களின் அனுபவமாக உணர்ந்திட்ட கட்சிகள் தற்போது ஓரணியில் திரண்டு நிற்கின்றன.

தேசியக் கட்சிகள், மாநிலக் கட்சிகள் என நாட்டின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் மதச்சார்பின்மை கொள்கையின் மீதும் நம்பிக்கை உடைய அனைவரும் கரம் கோர்த்து அணிவகுத்து நிற்கின்றனர்.

இந்தியா கூட்டணி வெல்லும், வெற்றி பெற்றே தீரும் என்கிற நம் நம்பிக்கை முழக்கம் நாடு முழுவதும், எட்டு திசையும் எதிரொலிக்கின்றது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# பிப் 16ல் வேலை நிறுத்தம், மறியல்!

## அனைத்து தொழிற்சங்க கூட்ட முடிவுகள்

தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களில் கூட்டம் சென்னை எச்எம்எஸ் அலுவலகத்தில் 23.01.2024 மாலை 4.00 மணிக்கு தொமுச பொதுச்செயலாளர் தோழர் மு.சண்முகம் எம்பி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், கி.நடராஜன், பி.பன்னீர்செல்வம், எம்.சண்முகம், என்.தனசேகரன், (தொமுச), டி.எம்.மூர்த்தி, ஆர்.ஆறுமுகம் (ஏஐடியுசி) வி.குமார், (சிஐடியு) க.அ.ராஜாஸ்ரீதர், மு.சுப்பிரமணியன், பி.மோகன்தாஸ், (எச்எம்எஸ்) ந.க.நாராயண்சாமி, பி.சுகுமாரன் (ஐஎன்டியுசி) வி.சிவக்குமார், (ஏஐயுடியூசி) எம்.திருநாவுக்கரசு. உ.அதியமான் (ஏஐசிசிடியு) கே.ராம்பாபு (டபுள்யுபிடியுசி) எஸ்.மாயாண்டி (டியுசிசி), இரா. அந்திரிதாஸ், (எம்எல்எப்) க.பேரறிவாளன் (எல்எல்ஃஎப்) ஏ.எஸ்.குமார், ஜி.முனுசாமி (எல்டியுசி) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:

ஒன்றிய அரசின் பேரழிவுக் கொள்கைகளுக்கு எதிராக தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மக்களின் பல்வேறு பிரிவுகள் ஏற்கனவே பல முனைப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிலாளர், விவசாய சங்கங்களின் பெரும் திரள் அமர்வுக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வெற்றி பெறும் வரை, மக்கள் மத்தியில் தீவிர பிரச்சாரம், போராட்டங்களின் மூலம் வகுப்புவாத கார்ப்பரேட் கூட்டணியை எதிர்த்துத் தோற்கடிப்பதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பு நமது தோள்களில் உள்ளது.

இதனை மையமாகக் கொண்டு நாம் முடிவு செய்தவாறு ஜனவரி 26 ஆம் தேதி விவசாயிகள் ஐக்கிய முன்னணி விடுத்த அழைப்பின்படி நடக்கும் மாவட்ட அளவிலான டிராக்டர்/வாகன அணிவகுப்பில், தொழிற்சங்கங்களின் ஒருமைப்பாட்டை தெரிவிக்கும் வகையில். தொழிலாளர்களும் இருசக்கர வாகனங்கள், ஆட்டோ, கார் உள்ளிட்ட வாகனங்களோடு சென்று பங்கேற்க சிறப்பாக திட்டமிட்ட விவரங்கள் வந்து கொண்டு இருக்கின்றன.

### பிப். 16ம் தேதி வேலை நிறுத்தம், மறியல்:

பிப்ரவரி 16ம் தேதி வேலை நிறுத்தம், கிராமங்களில் முழு அடைப்பு, மறியல் உள்ளிட்ட வடிவங்களில் போராட்டம் நடத்த வேண்டும் என்று மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாயிகள் ஐக்கிய முன்னணியின் கூட்டு கூட்டம் முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் பிப்ரவரி 1 ஆம் தேதிக்கு முன்பாக துறைவாரியாகவும், தொழிற்சாலை அளவிலும் வேலைநிறுத்த முனறிவிப்பு நோட்டீஸ் தர வேண்டும். பிப்ரவரி 16 ஆம் தேதி வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற தக்க அனைத்து பரப்புரை உள்ளிட்ட ஏற்பாடுகளையும் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். விவசாயிகள் சங்கங்களின் 'கிராமப்புற பந்த்' போராட்டம் வெற்றிபெற அனித்து ஒத்துழைப்புகளையும் தொழிற்சங்கங்கள் வழங்க வேண்டும்.

*பிப்ரவரி 16 மறியல்:* வேலை நிறுத்தம், 'கிராமப்புற பந்த்' நடைபெறும் அதே நாளில் மாவட்ட தலைநகர்களிலும், தொழில் மையங்களிலும் ஒன்றிய அரசு அலுவலங்கள் முன்பாக மாபெரும் மறியல் போராட்டங்கள் நடத்த வேண்டும்.

### மக்கள் விழிப்புணர்வு பர்ப்புரையை தொடர்வோம்:

கோரிக்கைகளை விளக்கி விரிவான பரப்புரை இயக்கம் மேற்கொள்ள வேண்டும். தெருமுனை கூட்டங்கள், ஆலைவாயில் கூட்டங்கள், தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் வீடு வீடாகச் சென்று துண்டறிக்கை விநியோகத்தல் உள்ளிட்ட வடிவங்களில் இந்த இயக்கத்தை தொடர்ந்து நடத்த வேண்டும்.

### மக்கள் அமைப்புகளின் ஆதரவு கோருதல்:

இளைஞர், மாணவர், பெண்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய துறையினர், சிறுகுறு தொழில் நிறுவங்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட கோரிக்கையை ஆதரித்து போராட உடன் வரும் மக்கள் அமைப்புகளிடமும் ஆதரவு கோரி, மறியல் போராட்டத்தில் பங்கேற்க செய்திட வேண்டும்.

## குடியரசு தின விழாவில் பங்கேற்க ஆளுநர் அழைப்பு


### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிப்பு!

ஆளுநர் அழைப்பை நிராகரிக்கிறோம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

குடியரசு தின நிகழ்வில் பங்கேற்குமாறு ஆளுநர் ஆர்.என்.ரவி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளார். ஆளுநர் மாளிகை அழைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், அதேசமயம் நாட்டின் விடுதலை போராட்ட வரலாற்றை புரட்டி பேசுவதும், அறிஞர் உலகம் ஒரு ஆயிரம் ஆண்டில் மனித சமூகம் கண்டறிந்த பேரறிவாளர் காரல் மார்க்ஸ் என்று ஏற்றுக் கொண்ட நிலையில் அவரை சிறுமைப்படுத்தி பேசுவதும், நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் தலைமை சாரதியாக திகழ்ந்து, தேசத் தந்தை என ஏற்றுக் கொள்ளப்பட்ட மகாத்மா காந்தி குறித்து அவதூறு பரப்புவதுமான மலிவாக செயல்படும் ஆர்.என்.ரவியின் போக்குக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முறையில், அவரது அழைப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிக்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## லாலா லஜபதி ராய் சிலை திறப்பு விழா



விடுதலைப் போராட்ட வீரரும் ஏஐடியுசி முதல் தலைவருமான லாலா லஜபதி ராய் அவர்களின் சிலை, 28.01.2024, ஞாயிறு காலை 11 மணிக்கு, புதுடெல்லி ரோஸ் அவென்யூவில் உள்ள ஏஐடியுசி பவனில் திறந்து வைக்கப்படுகிறது. இந்த விழாவில் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் தலைவர்களும், லாலாஜியின் கொள்ளுப்பேத்தியான அனிதா கோயல் பங்கேற்கிறார்கள். அனைவரும் வந்து கலந்து கொள்ளுமாறு அழைக்கிறேன்.

**அமர்ஜீத் கவுர்**
பொதுச் செயலாளர் ஏஐடியுசி

## செங்கல்பட்டில் லெனின் நூற்றாண்டு விழா

லெனின் நூற்றாண்டு நினைவு தின கருத்தரங்கம் செங்கல்பட்டு மாவட்டம் இடது சாரி கட்சிகள் சார்பில் மாவட்ட குழு உறுப்பினர் நாராயணன் தலைமையில் சிங்கபெருமாள் கோயில் ஆர் இ பார்ட்டி ஹாலில் நடைபெற்றது. இதில் சிபிஐ மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந் திரநாத், சிபிஎம் மாநில செயற்குழு உறுப்பினர் என்.குணசேகரன், சிபிஎம்எல் மாநில குழு உறுப்பினர் செ.இரணியப்பன், பாட்டாளி வர்க்க சமரன் அணி எம்.மனோகரன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

இதில் சிபிஐ மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிமாவட்ட செயலாளர் பாரதிஅண்ணா, சிபிஐ எம்எல் மு.தினேஷ்குமார், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட துணை செயலாளர் வி. வீராசாமி, கலை இலக்கிய பெருமன்றம் மாவட்ட செயலாளர் சி.ராமலிங்கம், மாவட்ட குழு உறுப்பினர் கேவி.சேகுவேராதாஸ் உள்ளிட்ட இடதுசாரி கட்சிகளின் தோழர்கள் பங்கேற்றனர்.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

இதனை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள இயலாத, முடியாத மூர்க்கர்கள் ராமனை தூக்கிச் சுமந்து அரசியல் லாபம் அடைய முயல்கின்றார்கள்.

தங்களின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு கேட்க வக்கற்றவர்கள் இராமனை துதிப்பதன் மூலம் வஞ்சக வலை விரித்து வாக்குகளைப் பெறலாம் என்று முயல்கிறார்கள்.

சின்ன மீனை தூண்டிலில் இட்டு பெரிய மீனைப் பிடிக்க முயல்கின்றார்கள்.

இராமனை சின்ன மீனாக்கி, வாக்காளர்களை பெரிய மீனாக கருதுகின்றார்கள்.

மத்தளத்தை அடித்து ஓசை எழுப்புவார்கள். இசை சத்தம் கேட்டு மக்கள் அங்கே கூடுவார்கள்.

வேடிக்கை பார்க்க வந்த மக்களிடத்தில் இதோ பாரு.. இதோ பாரு.. கீரியும் பாம்பும் சண்டை நடக்கப் போகுது பாரு.. என திரும்பத் திரும்ப சத்தமாக கூறிக் கொண்டே இருப்பார்கள்.

இடை இடையே பணம் போடுங்க சாமி.. காசு போடுங்க சாமி.. என்று கூறுவார்கள்.

பாம்புக்கும் கீரிக்குமான சண்டையைக் காண காத்திருக்கும் கூட்டம் அங்கே விரிக்கப்பட்டுள்ள துணியில் காசு, பணம் போடுவார்கள்.

பணமும் காசும் சேர்ந்த பின்னால் மோடி மஸ்தான்கள் வாரிச் சுருட்டிக்கொண்டு அடுத்த ஊருக்கு பயணமாவார்கள்.

அத்தகைய மோடி மஸ்தான்களுக்கும் பிரதமர் மோடிக்கும் என்னய்யா வேறுபாடு?

பிழைப்புக்காக கீரி பாம்புச் சண்டை என கூறும் மஸ்தான்கள், வாக்குகளை பெறுவதற்காக ராமன் பெயரைக் கூறி வலம் வரும் மோடிகள் மோடிஜிகள்.

உஷார்.. உஷார்..உஷார்.. மக்களை கவனப்படுத்திட வேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் நம் முன்னால் உள்ளது.

காலம் மிகக் குறுகியதாக உள்ளது.

கடமை பெரிதாக உள்ளது.


களத்தில் இறங்குவோம், பணியாற்றுவோம்!

வெற்றி பெறுவோம்!

வணக்கம்

மீண்டும் சந்திப்போம்.

தோழமைமிக்க,




(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## வினாடி – வினா

1. மார்க்சியம் எந்த இரண்டு ஆளுமைகளின் பிரிக்க முடியாத பணிகளால் உருவானது?
2. காரல் மார்க்ஸ் தனது "மற்றொரு பிரதி"யாக (Alter Ego) யாரை குறிப்பிடுகிறார்?
3. இந்திய அரசியலமைப்பு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
4. இந்திய அரசியலமைப்பு சட்ட வரைவுக் குழுவின் தலைவர் யார்?
5. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எத்தனை அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன?
6. இந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றி ஆய்வுகளின் தந்தை என போற்றப்படுபவர் யார்?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 43

## பள்ளிக்கூடமா? கோவிலா?

திருவிழாக்களின் போது, இயல்பான உடல் அசைவுகளில் இருந்து மாறுபவர்களைச் சுற்றி நின்று, உரத்த ஓசையோடு கொட்டு முழக்கி, 'சாமியாட' வைப்பதைப் பார்த்திருக்கிறோம்.

நாட்டையே அவ்வாறு ஆட வைக்க, ஜனவரி 22 பாலராமர் சிலை நிறுவும் நாளை ஆர்எஸ்எஸ் – பிஜேபி பயன்படுத்திக் கொண்டது.

செவி அடைக்கச் செய்யும் அந்த பெரும் ஓசை தணிந்த பின்பு, அந்தக் கோவிலை கட்டுவதற்கும் குடமுழுக்கு செய்வதற்கும், பல நூறு வீடுகள், கடைகள் இடிக்கப்பட்டு சாமானிய மக்கள் நிராதரவாக தெருவில் நிறுத்தப்பட்ட கண்ணீர்க் கதைகள் காதில் விழுகின்றன.

நல்ல வேளையாக இந்த ஜுரம் தென்னிந்தியாவில் அவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

தமிழ்நாட்டில் நடத்தப்படும், கார்ப்பரேட் வணிக தொலைக்காட்சிகள் நடத்தும் ஆடம்பர விழாக்களிலும் கூட, மத நல்லிணக்கத்தையும் மக்கள் ஒற்றுமையும் பேசி, பாடினால் தான் அவற்றின் டிஆர்பி ரேட் அதிகரிக்கிறது. தமிழ் மக்களின் மனநிலையை இது தெளிவாக வெளிப்படுத்துகிறது.

மதுரை சித்திரை திருவிழாக்களில், திருச்செந்தூர் சூரசம்ஹாரம் உள்ளிட்ட லட்சக்கணக்கான மக்கள் கூடும் திருவிழாக்கள் ஒரு சிறு அசம்பாவிதம் கூட இல்லாமல் நடக்கின்றன. அவர்கள் பங்கேற்கும் மக்களின் பக்தி என்பது பொய்யற்ற, தூய்மையான நம்பிக்கையின் வெளிப்பாடு. 'சர்வ சக்தியான' இறையிடம் தம்மையும் தம் துயரங்களையும் கரைத்துக் கொள்ளும் முயற்சி அது.

அதே நேரத்தில் சில நூறு பேர் சேர்ந்து நடத்தும் விநாயகர் சதுர்த்தி விழாக்களில், பதட்டமும் பரபரப்பும் அச்சமும் கலந்த சூழல் ஏற்படுவதையும், எந்த நேரத்திலும் கலவரம் வெடிக்கும் அபாயம் உருவாக்கப்படுவதையும் தமிழ்நாட்டு மக்கள் அறிந்தே இருக்கிறார்கள்.

'காதலாகி, கசிந்துருகி, கண்ணீர் மல்கி இறைவனோடு ஒன்றுகிற பக்திக்கும் இவர்களுக்கும் கடுகளவும் சம்பந்தம் இல்லை.

இது மதத்தை ஆயுதமாக பயன்படுத்தும் அரசியல்.

எனவே சங்கப் பரிவாரங்கள் ஜனவரி 22ல் இங்கு ஏற்படுத்த முயன்ற சலசலப்புகளை தமிழ்நாட்டு மக்கள் அங்கீகரிக்கவில்லை.

நினைத்ததை நடத்த முடியாமல் போனதால், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு வரும் ஆத்திரம், திமுக அரசு மீது சீறிப் பாய்கிறது

தமிழ்நாட்டில் 200க்கும் மேற்பட்ட ராமர் ஆலயங்கள் இருக்கின்றன.

கோவில்களில் பூஜை, அர்ச்சனை, பஜனை, அன்னதானம், பிரசாதம் எதுவுமே கூடாது என திமுக அரசு தடுத்து விட்டதாம்.

தனியார் கோவில்களிலும் கூட, சாலையை மறித்து பந்தல் போடுவதை காவல்துறை அனுமதிக்க வில்லையாம். தமிழ்நாட்டின் அனைத்து கோவில்களிலும் காணொளி காட்சிகளைக் காட்டவில்லையாம். அம்மையார் சரமாரியாக குற்றம் சாட்டுகிறார்.

இதனை ஆணித்தரமாக தமிழ்நாடு அரசு மறுத்துள்ளது. எந்த அடிப்படையும் இல்லாத, இட்டுக்கட்டப்பட்ட பொய்களை, நிதி அமைச்சர் என்னும் உயர்ந்த இடத்தில் இருப்பவர் பேசுவது, அந்தப் பொறுப்பின் தகுதியையே தாழ்த்துகிறது.

வழிபாடு நடத்த அரசியல் சாசனம் வழங்கியுள்ள உரிமை பாதிப்புக்குள்ளாகி விட்டதாக பாஜக பிரமுகர் உச்ச நீதிமன்றத்தில் அவசர மனு தாக்கல் செய்தார். சாத்தான் வேதம் ஓதுவது என்பது இதுதானோ!

தமிழ்நாட்டில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான கோவில்கள் உள்ளன. இவற்றில் 38,615 கோவில்கள், இந்து சமய அறநிலையத்துறையின் காப்பில் இருப்பவை. இதில் 30,000க்கு மேற்பட்டவை பழைய கோயில்கள். அதிலும் கூட 200க்கும் மேற்பட்ட கோவில்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை. இவற்றுள் 754 கோவில்களில் தினந்தோறும் அன்னதானம் நடைபெறுகிறது.

வேறு எந்த மாநிலத்திலும் இத்தனை கோவில்களும், இத்தனை திறமையான நிர்வாகமும் இல்லை. தமிழ்நாட்டில் ராமனுக்கு 40 கோவில் கூட இல்லை. பெருமாள் கோவில்களை எல்லாம் ராமர் கோவில் என்று மடைமாற்ற நிர்மலா முயல்கிறார்.

இதே நாளில் அஸ்ஸாமில் ஒரு கோவிலுக்குள் ராகுல் காந்தி சென்று வழி விட விரும்பிய போது அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். இதற்கு நிர்மலாவின் பதில் என்ன?

மசூதிகளில், காலையில் முஸ்லிம்களை ஒலிபெருக்கிகள் மூலம் தொழுகைக்கு அழைக்கும் ஆஸான் அறிவிப்பால், ஒலி மாசு ஏற்படுவதாகவும், எனவே அதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் இதே பாஜகவினர் குஜராத் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததைப் பற்றி நிர்மலாவின் கருத்து என்ன?

"கோவில் கட்டினால் பிச்சைக்காரர்கள் தான் உருவாக்கப்படுவார்கள். நல்ல வாழ்க்கை கிடைக்க பள்ளிக்கூடம் தான் வேண்டும், கோவில்கள் அல்ல" என்று அயோத்தியிலேயே ஒரு சிறுவன் தொலைக்காட்சியில் சொன்னது வைரலாகி இருக்கிறது.

இவர்கள் இத்தனை ஆடம்பர களேபரங்களும், அவனது ஒற்றை வரி சொல்லாடலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் துவண்டு விழுகின்றன!

# தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்து நாடு முழுவதும் 5 கோடி கையெழுத்து இயக்கம்!







அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழு கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் மாநில துணைத்தலைவர் நிருபன் தலைமையில் நடைபெற்றது. இதில் இளைஞர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் க.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் லகுமய்யா ஆகியோர் கலந்து கொண்டு அரசியல் விளக்க உரையாற்றினர். அகில இந்திய பொதுச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் கலந்துகொண்டு தேசிய குழு முடிவுகளை எடுத்துரைத்தார்.

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநில செயலாளர் பா.தினேஷ் அமைப்பு நிலை, எதிர்கால கடமைகள் குறித்து பேசினார். கூட்டத்தில் புதிய மாநில தலைவராக க. இப்ராகிம், மாநில பொருளாளராக பி.கணேசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து ஒன்றிய அரசின் மாணவர் மற்றும் கல்வி விரோத போக்கை கண்டித்தும். மற்றும் தேசிய கல்விக் கொள்கை 2020 ஐ ரத்து செய்ய கோரியும் ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைப் பறிக்கின்ற தனியார் பயிற்சி மையங்களுக்கு கொள்ளை லாபம் ஈட்டித் தருகிற நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும். இந்தியா முழுவதும் உள்ள மாணவர்களின் கல்விக் கடனை ரத்து செய்ய வேண்டும். இந்தியா முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் மாணவர் பேரவை தேர்தலை நடத்தி வேண்டும். கல்வியைப் பொதுப் பட்டியலிலிருந்து மாநில பட்டியலுக்கு மாற்றிட வேண்டும். இந்தியா முழுவதும் உள்ள அனைத்து வகைக் கல்வி நிலையங்களிலும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்பிட வேண்டும். மத்தியப் பல்கலைக்கழகங்கள் மாணவர் சேர்க்கைக்கான ( சியூஇடி ) நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வேண்டும். இந்தியா முழுவதும் கல்வியில் தனியார்மய மற்றும் வர்த்தக நடவடிக்கையை தடுத்து நிறுத்திட வேண்டும்.

நாடு முழுவதும் ஒரே பாடத்திட்டம் என்ற பெயரில் மாநிலங்களின் பண்பாடு, கலாச்சாரம், வரலாறை சிதைக்காதே. பல்கலைக்கழக வேந்தராக ஆளுநரை நியமிக்கும் முறையைக் கைவிடு. ஒன்றிய அரசின் கல்வி நிலையங்களில் மாநில மொழியைக் கட்டாயமாக்கு, இந்தி மொழியைத் திணிக்காதே. பகத்சிங் தேசிய வேலை உறுதி அளிப்பு சட்டத்தை இயற்று ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனவரி 23ஆம் தேதி முதல் மார்ச் 23ஆம் தேதி வரை நாடு முழுவதும் நடைபெறும் 5 கோடி கையெழுத்து இயக்கத்தை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவது, தமிழ்நாட்டில் 25 லட்சம் மாணவர்களிடம் கையெழுத்து பெறுவது என்று முடிவு செய்யப்பட்டது.

கல்வியை பாதுகாப்போம், தேசிய கல்விக் கொள்கையை புறக்கணிப்போம். பிஜேபி புறக்கணிப்போம், இந்தியாவை ஆதரிப்போம் என்ற தலைப்பில் சென்னையில் பிப்ரவரி 1ம் தேதி மாணவர் அமைப்புகளின் கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் பேரணி, பொதுக்கூட்டத்தில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தோழர்களை பெருந்திரளாக பங்கேற்பது என்று முடிவு செய்யப்பட்டது.

மேலும் லெனின் நூற்றாண்டு நினைவை முன்னிட்டு மாணவர் பெருமன்றம் சார்பில் மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

# தொழிலாளர் சட்ட திருத்தங்கள் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் விளைவுகள்

லயோலா கல்லூரி, புதுதில்லி வி.வி.கிரி தொழிலாளர் நிறுவனம், ஏஐடியுசி ஆகிய மூன்றும் இணைந்து புதிய தொழிலாளர் சட்டம் குறித்த இரண்டு நாள் கருத்தரங்கை நடத்தின. சென்னை இலயோலா கல்லூரியில் ஜனவரி 22, 23 தேதிகளில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கை ஏஐடியுசி பொதுச்செயலாளர் அமர்ஜித் கௌர் தொடங்கி வைத்தார். சென்னையின் பல்வேறு கல்லூரிகளில் சமூகப் பணியில் முதுநிலை படிக்கும் கிட்டத்தட்ட 200 மாணவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் பத்துக்கும் மேற்பட்ட கருத்தாளர்கள் பேசினர்.

'1948 ல் நானூறு ரூபாய் வரை சம்பளம் வாங்குபவர்களுக்கு இ.எஸ்.ஐ. சட்டம் பொருந்தும் என சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர்களின் சம்பளமே அதற்கு குறைவாகத்தான் இருந்தது. இப்போது 21,000 ரூபாய் வரை சம்பளம் வாங்குபவர்களுக்குதான் இஎஸ்ஐ பொருந்தும். அப்படியானால் இந்தச் சட்டம் எவ்வளவு பின்தங்கி உள்ளது என்பதைப் பாருங்கள்' என்றார் வழக்கறிஞரும், சமூகப் பாதுகாப்புச் சட்டங்களை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்காடி வரும் செயல்பாட்டாளருமான ஆர்.நடராஜன்.

"ஒப்பந்த முறையில் ஆட்களை எவ்வளவு ஆண்டுக்குள் வேண்டுமானாலும் சட்டப்பூர்வமாக வைத்துக்கொள்வதை புதிய தொழிலாளர் சட்டம் அனுமதிக்கிறது. வேலைநிறுத்த உரிமையை பறிக்கும் அம்சங்களையும், சங்கங்களை பதிவு செய்வதை கடினமாக்கவும், இரத்து செய்யவும் வழிவகுக்கும் பல பாதகமான அம்சங்கள் அதில் உள்ளன ' என்றார் பாதுகாப்புத்துறை தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்த ஸ்ரீ குமார்.

'கார்ப்பரேட் சமூகப் பொறுப்புக் கொள்கையின்படி (CSR) ஒரு நிறுவனம் தனது நிறுவன ஊழியர்களுக்கு தமது ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தினக்கூலி உள்ளிட்ட அனைத்து ஊழியர்களுக்கும் இந்த நாட்டு சட்டங்களை (குறைந்த பட்ச ஊதியம், இ.எஸ்.ஐ., வருங்கால வைப்புநிதி உள்ளிட்டவை) அமலாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது' என்றார் சென்னை சமூகசேவைப் பள்ளியின் பேராசிரியரான அறிவுக்கரசி.

'அனைவருக்கும் மகப்பேறு வசதி, சுகாதார வசதி, ஓய்வூதியம் உள்ளிட்ட சமூகப்பாதுகாப்பு திட்டங்களை உறுதிசெய்யும் வகையில் புதிய சமூகப்பாதுகாப்புச் சட்டம். இல்லை' என்றார் உயர்நீதி மன்ற வழக்கறிஞரான ரமா பிரியா.

'வேலை நேரத்தை உயர்த்தும் சட்டத்தை எதிர்த்து தமிழக மக்கள் வலுவாக குரல் கொடுத்ததால் தமிழ்நாட்டில் அது திரும்ப பெறப்பட்டது. ஆனால் கர்நாடகத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தாலும் திரும்ப பெறப்படவில்லை. பொதுமக்களின் ஆதரவு தொழிலாளர் போராட்டங்களுக்கு அவசியமான ஒன்று' என்றார் ஏஐடியுசியின் மாநிலப் பொதுச் செயலாளரான எம்.இராதாகிருஷ்ணன்.

'தொழிற்சங்கங்கள் முதலாளிகளிடமிருந்து, அரசாங்கத்திடமிருந்து, அரசியல் கட்சிகளிடமிருந்து விலகி சுயேச்சையாக செயல்பட வேண்டும்' என்றார் இந்தக் கருத்தரங்கை தொடங்கி வைத்த அமர்ஜித் கௌர்.

இந்த நிகழ்ச்சியை இலயோலா கல்லூரியின் துறைத் தலைவர் மேரி ஜான்சி ராணி, பேரா. ஜான் பால் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்தனர். கல்லூரி மாணவியான டிரினிட்டா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

உலகத் தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதி எலினா, நெய்வேலி நிலக்கரி நிறுவன சமீர் உள்ளிட்ட பல ஆளுமைகள் இந்த நிகழ்ச்சியில் பேசினர். ஏஐடியுசியின் செயலாளரான வகிதா கருத்தரங்கில் நிறைவுரை ஆற்றினார்.

தொகுப்பு: பி. பீட்டர்

# இதிகாச ராமனை பரிகாசமாக்கிய அயோத்தி ஆலய திறப்பு விழா!



த.லெனின்

**ராமர் கோவில் கும்பாபிஷேக விழாவில் பங்கேற்கும் பிரதமர் மோடி 11 நாள் விரதத்தை மேற்கொண்டார். தினமும் இளநீர் மட்டுமே அவர் பருகி வந்ததாகவும் மெத்தையை தவிர்த்து போர்வையை விரித்து படுத்து தூங்குவதாகவும் கூறப்படுகிறது.**

அத்துடன அவர் தினமும் ராம மந்திரங்களை உச்சரித்து வருவதோடு ராமாயணத்தோடு தொடர்புடைய கோவில்களுக்கும் பிரதமர் மோடி சென்று வந்தார். மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் அருகே உள்ள பிரசித்தி பெற்ற காலா ராம் அதாவது கருப்பு ராமர் ஆலயத்திற்கு சென்று வந்தார் இந்த ஆலயத்தில் தான் தலித்துகளின் வழிபாட்டு உரிமைக்காக கோவில் நுழைவுப் போராட்டத்தை அறவழியில் 1930 முதல் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் டாக்டர் அம்பேத்கரால் மேற்கொள்ளப்பட்டது.

அதற்குப் பிறகுதான் தலித்துகள் அந்த கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டனர் என்பது வரலாறு. அந்தக் கோயிலுக்கு தான் இவர் சென்று வந்தார். புயல், பெருமழை வெள்ளத்தில் தமிழ்நாட்டு மக்கள் அல்லல் பட்ட போது வராத பிரதமர் தான் இப்போது திருச்சி, ஸ்ரீரங்கம் மற்றும் ராமேஸ்வரம் கோவில்களுக்கும் சென்று வழிபட்டு சென்றார்.

### முக்கிய யாஜ்மன் பிரதமர்!

பிரதமர் மோடி ஜனவரி 22ம் தேதி நடந்த கும்பாபிஷேக விழாவில் 'முக்கிய யாஜ்மன்' (Mukya Yajman) ஆக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என கோவில் அறக்கட்டளை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாஜ்மன் என்ற சமஸ்கிருத வார்த்தைக்கு மதம் சார்ந்த விழாக்களில் முன்னின்றி சடங்குகள் செய்யும் நபரை தான் 'முக்கிய யாஜ்மன்' என அழைப்பார்கள். அதன்படி கும்பாபிஷேக விழாவில் பிரதமர் மோடி முன்னின்று புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட ராமர் சிலையை கோயிலில் வைத்த நிகழ்வும் மிகப் பிரமாண்டமாக நடந்தேறியது.

உலக வைணவ (திவ்விய தேசங்கள்) ஆலயங்களுக்கு எல்லாம் தலைமை ஆலயம் தமிழ்நாட்டின் ஸ்ரீரங்கம் தான். அப்படி இருக்கையில் அயோத்தியில் ராமர் ஆலயம் என்ற பெயரில் புதிய தலைமை ஆலயமாக விளம்பரப்படுத்தப்படுவது ஏன்?இதில் எங்கே இருக்கிறது ஆன்மீகம்?

அடாவடி மதவெறி பாசிச அரசியலைத் தவிர வேறு என்ன?கார்ப்பரேட் ஏகபோக நிறுவனங்களைப் போல நாட்டின் ஒவ்வொரு பகுதிகளில் அந்தந்த மக்களின் நம்பிக்கையைப் பெற்ற சிறு தெய்வ வழிபாடு உட்பட புகழ் பெற்ற வழிபாட்டுத் தலங்களை எல்லாம் புறம் தள்ளிவிட்டு ஒற்றை ஆலயத்தை உயர்த்தி பிடிப்பது என்ற நிலைக்கு தான் பாஜக இன்று வந்திருக்கிறது எப்படி அதானி அம்பானிகள் பார்க்கப்படுகிறார்களோ அப்படித்தான் இந்த ஆலயமும் ஆக்கப்பட்டு விட்டது என்பதுதான் வரலாற்றின் முரண் !

### கோவில் கட்ட போட்டோ போட்டி!

இதைப் பார்த்த ஒடிஸா அரசு நான் என்ன இளைத்தவனா என்னும் விதத்தில் பூரி ஜெகநாதர் ஆலயத்திற்கு அருகில் ஒரு பண்பாட்டு மைய வளாகத்தை 400 கோடி செலவில் அமைக்க இருப்பதாக அறிவித்துள்ளது. மத்திய பிரதேச அரசு அயோத்தி வழியில் உள்ள சித்திரக்கோட் என்ற இடத்தில் அயோத்திக்கு இணையாக 400 கோடி ரூபாய் செலவில் ஒரு பண்பாட்டு நகரத்தை ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியோடு கட்ட இருப்பதாக அறிவித்துள்ளது.

போட்டி இப்போது எங்கே வந்திருக்கிறது பார்த்தீர்களா? உலக அளவில் அதிக வழிபாட்டுத் தலங்கள் உள்ளது இந்தியாவில்தான். ஒரு கணக்கெடுப்பின்படி மருத்துவமனைகளை விட அதிக வழிபாட்டுத் தலங்கள் இந்தியாவில் தான் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் தான் இது போன்ற புதிய ஆலயங்கள் கட்டப்படுகிற செய்தி எதை காட்டுகிறது?

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அனைவருக்குமான வளர்ச்சியை உறுதிப்படுத்துவோம், வேலை வாய்ப்பை அதிக அளவில் உருவாக்குவோம், கருப்பு பணத்தை கைப்பற்றுவோம், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவோம் என்று வாய் ஜம்பம் அடித்தவர்கள் இன்று அதை எல்லாம் பேச முடியாத நிலைக்கு வந்து விட்டதன் விளைவு தான் ஆலய அரசியலுக்குள் தங்களை மறைத்துக் கொண்டு ஆன்மீக ஞானிகள் போல உலா வர தொடங்கி இருக்கின்றனர்.

### அயோத்தியில் பிரதமரோடு பங்கேற்றவர்கள்!

அயோத்தி விழாவுக்காக பிரதமர் மோடி 10.25 மணிக்கு அயோத்தி விமான நிலையத்துக்கு வந்தார். மதியம் 12.15 முதல் 12.45 மணிக்குள் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பிரதமர் மோடி கோவில் கருவறையில் ராமர் சிலைக்கு முன்பு அமர்ந்து பிரான் பிரதிஷ்டைக்கான சடங்குகளை செய்தார். மொத்தம் 40 நிமிடம் பிரதமர் மோடி ராமர் கோவிலில் இருந்தார்.

பிரதமர் மோடியுடன் ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த்த சேத்ரா அறக்கட்டளை தலைவர் கோபால் தாஸ், ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத், உத்தர பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் விழாவுக்கு முன்னிலை வகித்தனர்.



பழங்குடியினத்தைச் சார்ந்த நாட்டின் முதல் குடியரசு தலைவரான திரௌபதி முர்முவை இத் திறப்பு விழாவிற்கு அழைக்காதது பெரும் பேசு பொருளாக ஆகியுள்ளது. சங்கராச்சாரியார்கள் பிரதமர் ராமர் சிலை கும்பாபிஷேகம் செய்வது சாத்திரங்களுக்கு, ஆகமகங்களுக்கு எதிரானது என்று கூறிய நிலையில் தற்போது பிரதிஷ்டை சடங்குகளை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த வெவ்வேறு சமுதாயங்களை சேர்ந்த 14 தம்பதிகள் மேற்கொண்டனர்.

தலித் முதல் பழங்குடியினர், ஓபிசி பிரிவுகளை சேர்ந்த தம்பதிகளும் இதில் அடங்குவர். இந்த தம்பதிகள் கோவிலில் பிரதிஷ்டை தின யாகம் செய்தனர். முன்னதாக இவர்களின் பட்டியலை ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த சேத்ரா அறக்கட்டளை வெளியிட்டு இருந்தது.

இவர்களெல்லாம் தம்பதியராக விழாவில் கலந்து கொண்ட போது பிரதமர் ஏன் தம்பதிகளாக வருகை தந்து சடங்குகளை மேற்கொள்ளவில்லை? ஒருவேளை ராமர் சீதாவை மீண்டும் வனவாசம் அனுப்பியது போல இவரும் தன்னை ஒப்பிட்டுக் கொண்டாரோ? இப்போது புதிதாக கட்டப்பட்டிருக்கிற அயோத்தியா ராமர் ஆலயத்தில் அனைத்து சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிப்பார்களா?

### மதச் சார்பின்மைக்காக குரல் கொடுத்த மலையாள திரை உலகம்!

மதச்சார்பின்மை மீது நம்பிக்கை கொண்ட மலையாள திரையுலகைச் சேர்ந்த பல பிரபலங்கள் இந்திய அரசியலமைப்பின் முகவுரையின் படத்தைப் பகிர்ந்ததால், சமூக ஊடகங்களில் எதிர்ப்பு 'வைரலாகியது'.

இயக்குனர்கள் கமல், ஆஷிக் அபு மற்றும் ஜியோ பேபி, நடிகர்கள் பார்வதி திருவோத்து, ரீமா கல்லிங்கல் மற்றும் திவ்யா பிரபா ஆகியோர் அடங்குவர். இருப்பினும், அவர்களில் பெரும்பாலோர் அயோத்தியில் மதச் செயல்பாடு குறித்த தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் இதனை செய்துள்ளனர்.

### மீண்டும் ஒரு சம்பூகக வதைபடலம்!

சமூக நீதிப் பிரச்சினைகளைப் பற்றிப் புகாரளிக்கும் இணையதளமான தி மூக்நாயகில் சமீபத்தில் வெளி யிடப்பட்ட தகவலின்படி , கான்பூர் காவல் நிலையத்தின் கீழ் உள்ள முண்ட்லா கிராம மக்கள், குறிப்பாக விளிம்புநிலை தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ராமர் கோயில் விழாக்களுக்கு, கலஷ் போன்றவற்றுக்கு நிதி அளிக்க தங்களை அணுகியதாகக் கூறியுள்ளனர். யாத்திரைகள், பிரசாதம் விநியோகம் போன்றவை ஆதிக்க சாதியைச் சேர்ந்த சிலரால் மேற்கொள்ளப்படுகிறது

தலித்துகளால் நன்கொடை அளிக்கப்பட்ட நிதி பின்னர் திருப்பிக் கொடுக்கப்பட்டது, "கோயில் சடங்குகளுக்கு தலித்துகளின் பணம் ஏற்றுக்கொள்ளப்படாது, மட்டுமின்றி அவர்களின் நன்கொடைகளால் செய்யப்பட்ட பிரசாதம் தூய்மையற்றதாக கருதப்படும்" என்று கூறப்பட்டதாம் பல்வேறு ஒடுக்கப்பட்ட பழங்குடியின அரசர்களை எல்லாம் தனது சகோதரனாக ஏற்றுக் கொண்ட ராமனுக்கான ஆலய இயக்கத்தில் தான் இது போன்ற நிகழ்வும் நடைபெற்றுள்ளது

இதனால் ஆத்திரமடைந்த தலித் சமூகத்தினர் மேக்வால், பைர்வா, தோபி மற்றும் மெஹர் சமூகத்தைச் சேர்ந்த கிராமவாசிகள், ஜனவரி 11ம் தேதி ஜாலவர் மாவட்ட நிர்வாகத்திடம் புகார் அளித்தனர்.

இதில் நெட்வொர்க் சமூகத்தைச் சார்ந்தவர்தான் மோடி அமைச்சரவையில் அர்ஜுன் ராம் மேக்வால் தற்போது சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சராக கடந்த 2023 முதல் செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த கிராமத்தில் வசிக்கும் முகேஷ் மேக்வால் என்பவரை தேடி சில அதிகாரிகள் தங்கள் கிராமத்தைச் சுற்றி வருவதாகவும், இது குறிதது முறையான வழக்கைப் பதிவு செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டி, புகாரை வாபஸ் பெறுமாறு போலீசார் இப்போது அழுத்தம் கொடுப்பதாகவும் கூறப்படுகிறது.

கிராமத்தில் பதற்றமான சூழல் நிலவுவதாகவும், "போலீசார் வழக்குப் பதிவு செய்யத் தவறினால், தலித் சமூகத்தினர் திங்கள்கிழமை ஜாலவார் மாவட்டத் தலைமையகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர்" என்றும் மேக்வால் கூறினார்.ராமனுக்கு ஆலயம் எழுப்பப்பட்ட அதே உத்தரப்பிரதேசத்தில் தான் இந்த நிகழ்வும் நடந்துள்ளது. இதுவும் ஒரு நவீன சம்பூக வதைப்படலமே !

கடந்த 2014 ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரையின் போது முன்வைத்த முழக்கங்கள் எதையும் செய்யத் தவறியது பா.ஜ.க அரசு. கடந்த 2019 பொதுத் தேர்தலுக்கு ஃபுல் வாமா தாக்குதலை முன்வைத்து வாக்குகளை பெற்றது மோடியின் அரசு.

எனவே நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு ராமனை நம்பித்தான் இன்று களத்தில் நிற்கிறது பாஜக ஒட்டுமொத்தமாக நாட்டில் உள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகள் ஒன்று திரண்டு இதை முறியடிக்க வேண்டும். அது ஒன்றே இந்தியாவை காக்கும் பாசிசத்தை வேரறுக்கும் !

தொடர்புக்கு 9444481703

---

ராமர் கோவில் திறப்பு நாளில்

## பில்கிஸ் பானு வழக்கு குற்றவாளிகள் 11 பேரும் சிறையிலடைப்பு!

குஜராத் மாநிலத்தில் கடந்த 2002ஆம் ஆண்டு நரேந்திர மோடி முதல்வராக இருந்தபோது நடைபெற்ற இஸ்லாமியர்களுக்கு எதிரான மதவன் முறையில், 21 வயது கர்ப்பிணி பெண்ணான பில்கிஸ் பானு கும்பல் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். அவரின் 3 வயது குழந்தை உட்பட குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில், 11 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவர்களை குஜராத் பாஜக அரசு, தனது அதிகா ரத்தை துஷ்பிரயோகம் செய்து, கடந்த ஆண்டில் முன்கூட்டியே விடுதலை செய்தது.

இது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில், ஜனவரி 8 அன்று அந்த 11 பேரின் விடுதலை யையும் அதிரடியாக ரத்துசெய்த உச்சநீதிமன்றம், அவர்கள் அனைவரும், 2 வாரங்களுக்குள் (ஜனவரி 21க்குள்) சிறை நிர்வாகத்திடம் சர ணடைய வேண்டும் என்றும் உத்தர விட்டது.

ஆனால், பில்கிஸ் பானு வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தலைமறைவானார்கள். அவர்களில் 3 பேர் தாங்கள் சரணடைய 4 முதல் 6 வாரங்கள் கூடுதல் அவகாசம் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்களை நீதிபதிகள் பி.வி. நாக ரத்னா, உஜ்ஜல் புயான் அமர்வு விசாரித்தது. அப்போது, "சரண டைவதை தள்ளிப்போடுவதற்காக மனுதாரர்கள் கூறியிருக்கும் கார ணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளும் படியாக இல்லை" என்று கூறிய நீதி பதிகள், குற்றவாளிகள் 11 பேரின் மனுக்களையும் வெள்ளிக்கிழமையன்று (ஜனவரி 19) தள்ளுபடி செய் தனர்.

அத்துடன், குற்றவாளிகள் 11 பேரும் ஜனவரி 21க்குள் சரணடைய வேண்டும் என்றும் உத்தர விட்டனர்.

இதையடுத்து, பில்கிஸ் பானு வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் 11 பேரும் குஜராத் மாநிலம் பஞ்சமஹாலில் உள்ள கோத்ரா சிறையில் ஞாயிற்றுக்கிழமை இரவு சரணடைந்தனர். உச்சநீதிமன்றம் குற்றவாளிகளை சிறையில் தள்ளியுள்ளது. குற்றவாளிகளை வழி நடத்திய ஆட்சியாளர்கள், அதே தேதியில் ராமர் கோயில் பிரதிஷ்டை செய்கிறார்கள்.



அருண் நெடுஞ்செழியன்




# பெருமழை, வறட்சி ஏற்படக் காரணம் என்ன?

**1901 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதிகபட்ச வெப்பம் மிகுந்த ஆண்டாக 2023 ஆம் ஆண்டை பதிவு செய்துள்ளது இந்திய வானிலை ஆய்வு மையம். இது வானிலை ஆராய்ச்சியாளர்கள், சூழலியலாளர்களிடம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.**

நூறாண்டுகளில் இல்லாத அதிகபட்ச வெப்ப நிலைகளும் அதிக மழை பொழிவுகளும் கடந்த பத்தாண்டுகளில் மட்டும் பதிவாகி இருக்கிறது. இனிவரும் காலங்களில் அதி கனமழையும் அதிவெப்ப அலைகளும் வாட்டி வதைக்கும் வெயிலும் அன்றாட செய்தியாகப் போகிறது. நடைபெறுகிற இயற்கைப் பேரிடர்களைத் தொகுத்துப் பார்த்தால், ஆபத்தான வானிலை கால மாற்றத்திற்குள் நாம் நுழைந்து விட்டதாகவே தெரிகிறது.

2023 ஆண்டில் இந்தியாவின் சாரசரியான மேல் காற்றின் வெப்பநிலை 0.6 டிகிரியாக இருந்தது. 2016 ஆம் ஆண்டில் மேல்காற்றின் வெப்பநிலை சுமார் 0.71 டிகிரியாயாக இருந்தது. 2023 ஆம் ஆண்டை எல்நினோ ஆண்டாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். 2023 ஆம் ஆண்டில் (கடந்த நூறாண்டுகளில்) இந்தியாவில் இரண்டாவது முறை அதிகபட்ச வெப்பநிலை பதிவாகி இருந்தது. இந்தியாவில் மட்டுமல்ல உலகளவில் பல நாடுகளில் 2023 ஆம் ஆண்டே, அதிக வெப்பம் மிகுந்த ஆண்டாக பதிவாகியுள்ளது.

இந்தியாவில் இயல்பை விட அதிக வெப்பம் அல்லது மழை பொழிவைப் பெற்ற மாதங்களாக பிப்ரவரி, ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்கள் பதிவாகியுள்ளன.

குறிப்பாக, டிசம்பர் மாதத்தில் இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பிரதேசங்களில் 25.5 மி.மீ. மழை பொழிந்துள்ளது. இது இயல்பைவிட 60 விழுக்காடு அதிகமாகும்.

தென்னிந்திய தீபகற்பத்தில் வடகிழக்கு பருவமழை காலத்தில் மிக அதிக மழை பொழிவு பதிவாகியுள்ளது. கடந்த நூறாண்டுகளில் அதிக மழைப் பொழிவை (98.5 மிமீ) பெற்ற ஆண்டுகளின் பட்டியலில் பத்தாவதாக 2023 ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது.

கடந்த நூறாண்டுகளில் அதிகபட்ச வெப்பநிலை 1.01 டிகிரி உயர்ந்துள்ளதையும், குறைந்தபட்ச வெப்ப நிலை 0.31 டிகிரி அதிகரித்துள்ளதையும் இந்திய வானிலை ஆய்வு மையம் சுட்டிக்காட்டுகிறது.


காலநிலை மாற்றமும் இந்தியாவில் இயற்கை பேரிடர் பாதிப்புகளும்!

வெப்பம் மிகுந்த ஆண்டுகளுக்கான இடைவெளி குறைந்து கொண்டே வருவது கவலை அளிக்க கூடியதாகும். குறிப்பாக நாகரிக மனித சமூக வரலாற்றில் அதிக வெப்ப மிகுந்த ஆண்டுகள் என சுமார் 19 ஆண்டுகளை வரிசைப்படுத்தினால், அதில் 18 ஆண்டுகள் 2001 ஆம் ஆண்டுக்கு பின்னரே வருவது அதிர்ச்சி தரும் எதார்த்த உண்மையாகும்.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியா எதிர்கொண்ட வெப்ப தாக்குதல் ஏராளம். குறிப்பாக 2015 ஆம் ஆண்டில் ஆந்திரப் பிரேதசம் மற்றும் தெலுங்கானாவில் வீசிய கடுமையான வெப்ப அலையால் கொத்துக் கொத்தாக மக்கள் மடிந்தனர். உலகளவில் ஐந்தாவது மிக மோசமான வெப்ப அலை என இந்தப் பேரிடர் கூறப்பட்டது. இதில் சுமார் 2500 பேர் மரணமடைந்தனர்.

வெப்பம் மிகுந்த ஆண்டுகள் அதிகரித்து வருவதும் ஓரிடத்தில் திடீரென அதிக மழை பொழிவதும், வெள்ளப் பெருக்கு ஏற்படுவதும் காலநிலை மாற்ற சிக்கலின் விளைவுகள் என இந்திய வானிலை மையம் உள்ளிட்ட அமைப்புகள் கூறத் தொடங்கிவிட்டன.






சென்ற ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஒவ்வொரு நாளும் இந்தியாவில் ஏதோவொரு இயற்கைப் பேரிடர் நிகழ்ந்துவந்ததாக அறிவியல் மற்றும் சூழலியலுக்கான ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. இந்த இயற்கைப் பேரிடரால் சுமார் 3,000 பேர் உயிரிழந்ததாகவும் 92,000 விலங்குகள் இறந்துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

குறிப்பாக சென்ற ஆண்டின் அக்டோபர் மாத தொடக்கத்தில் சிக்கிம் மாநிலத்தில் பொழிந்த அதிகனமழையின் தாக்கத்தால், தெற்கு லோனாக் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இந்த வெள்ள நீரானது சுந்தான்கில் உள்ள தீஸ்தா அணைக்கு சென்றடைந்து, அங்கிருந்து ஆக்ரோஷ வெள்ளப் பெருக்காக வெளியேறியது. அன்று இரவு அணையை திறக்க சில நிமிடங்கள் தாமதித்திருந்தால் அணை உடைந்துபோயிருக்கும். ஆனாலும் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர், தீஸ்தா ஆற்றில் கரை புரண்டோடி, பெரும் உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியது.



1968 ஆம் ஆண்டுக்கு பிறகு இந்தப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப் பெருக்கு இது என வானிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சென்ற ஆண்டின் இறுதியில் சென்னை, சென்னை புறநகர் பகுதிகள் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்பையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தியாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது போல சென்றாண்டு லிபியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் கடும் மழைப் பொழிவும் வெள்ள பாதிப்பும் ஏற்பட்டன. உலகின் ஒரு பகுதியில் மழை வெள்ள பாதிப்பென்றால் மறுபக்கம், பிரேசிலின் அமேசான் நதி கடுமையான வறட்சியால் தண்ணீர் இன்றி வறண்டு போனது.

உலகின் நுரையீரல் எனப் புகழப்படுகிற மழைக் காடுகளைக் கொண்டுள்ள அமேசான் வறட்சியால் பாதிக்கப்பட்டது சென்ற ஆண்டின் மிகப்பெரும் சூழலியல் ஆழிவு நிகழ்வாகும். அமேசான் நதியில் நீரின்றி கொத்துக் கொத்தாக மீன்கள் மடிந்தன. உயிரினங்கள் மாண்டன. சுமார் 5 லட்சம் பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டனர் என அந்நாட்டு அரசு அறிவித்தது.

வரலாறு காணாத இந்த வறட்சியை அடுத்து, அமேசான் மாகாணம், சுற்றுச்சூழல் நெருக்கடி நிலையை அறிவித்து, 20 மில்லியன் டாலருக்கு பேரிடர் பாதுகாப்பு திட்டங்களைத் தீட்டியது.

“2100 ஆம் ஆண்டிற்குள்ளாக காலநிலை மாற்ற சிக்கலை கட்டுப்படுத்தாவிட்டால், உலகின் பல இடங்கள் வாழ்வதற்கே தகுதியற்றவையாகும்” என சூழலியல் எழுத்தாளர் டேவிட் வால்ஸ் வேல்ஸ் எச்சரிக்கிறார்.

காலநிலை மாற்றச் சிக்கல் என்ற ஒன்று இல்லவே இல்லை என முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் போன்றோர் இனியும் மக்களை திசைதிருப்ப இயலாது. அதேநேரத்தில் காலநிலை மாற்ற சிக்கலுக்கு தொழில்நுட்ப தீர்வு காண்போம் என எலன் மஸ்க் போன்ற பெரும் கார்ப்பரேட்கள், நெருக்கடியை மூலதனமாக மாற்றிட பொய்யான, நடைமுறை சாத்தியமற்ற தீர்வுகளை பிரச்சாரம் செய்கின்றனர்.

காலநிலை மாற்ற சிக்கல் என்பது இன்று எத்தார்த்த உண்மையாகி விட்டது. அதற்கு தொழில்நுட்பத்தாலோ, தனி நபராலோ, சட்டத்தாலோ தீர்வு காண இயலாது. காலநிலை மாற்ற சிக்கல் என்பது முதலாளித்துவ உற்பத்தி முறையின் கோரமான பின் விளைவாகும். முதலாளித்துவ உற்பத்தி முறையானது, பணக்கார்கள், ஏழைகள் என சமூகத்தை இரு பெரும் வர்க்கமாக பிரித்து, ஏழைகளுக்கு வறுமையையும் நோயையும் எப்படி வழங்குகிறதோ அதேபோல காலநிலை மாற்ற சிக்கலுக்கும் முதலாளித்துவ அமைப்பின் உற்பத்திக் கழிவும் அதிக இயற்கை வளச் சுரண்டலும் காரணமாகியுள்ளது.

முதலாளித்துவ உற்பத்தி அமைப்பின் சுரண்டல் முறையை கம்யூனிஸ்ட்கள் மட்டுமே வரலாறு தோறும் மக்களிடம் அம்பலப்ப டுத்தி, அமைப்பாக்கி போராடி சமூக மாற்றத்தை ஏற்படுத்தி வந்துள்ளார்கள். அதுபோலே சூழலியல் நெருக்கடிகளுக்கு காரணமாக இருக்கிற முதலாளித்துவ லாப நோக்க விதிகளையும், இயற்கை வள சுரண்டலையும் அதனது பாதிப்புகளையும் மக்களிடத்தில் அம்பலப்படுத்தி, இருக்கிற ஒரே ஒரு புவிக் கோளத்தை காப்பது நமது உடனடி கடமையாக உள்ளது.

தொடர்புக்கு: 9842391963





வ.மணிமாறன்

# பிற்போக்கு குப்பைகளை திணிக்கத் துடிக்கும் அண்ணாமலை

**தமிழ் மொழி, திருக்குறள், கடந்த கால அரசர்கள், அவர்களின் வரலாறு மீது பாஜகவுக்கும் அதன் மாநில தலைவர் அண்ணாமலைக்கும் திடீர்ப் பாசம் பெருக்கெடுத்து ஓடுகிறது.**

"என் மண்; என் மக்கள்" என்ற பெயரில் அண்ணாமலை சொகுசுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். நினைக்கும் போது அவர் சென்று வரும் இந்தப் பயணத்தில், புளுகியவை ஏராளம். அவற்றை அம்பலப்படுத்தியும் வரலாற்று உண்மைகளை உணர்த்தியும் சமூக ஊடகங்களில் பலர் பதிவிட்டு வருகின்றனர்.

தமிழ் மொழியின் மீதும் தமிழ்நாட்டு வரலாற்றின் மீதும் அண்ணாமலையும் அவர் சார்ந்திருக்கும் பாஜகவும் வெளிப்படுத்தும் பற்றுகள் குறித்து இங்கு பார்க்கலாம்.

"குஜராத்தில் பிறந்த மோடிஜி, தமிழின் தொன்மையை உலகம் முழுவதும் சொல்லி வருகிறார். 'மனதின் குரல்' நிகழ்ச்சியில், உலகின் தொன்மையான தமிழ் மொழியில் தன்னால் சரளமாகப் பேச முடியவில்லையே என்று வருத்தப்பட்டார். தமிழ் நாட்டின் மீது அவருக்குப் பற்று இருக்கிறது. தமிழ் கலாச்சாரத்தின் மீது பாசம் இருக்கிறது. தமிழ் மொழியின் மீது அளவில்லா அன்பு இருக்கிறது. தமிழனாகப் பிறக்கவில்லையே என்ற குறை பிரதமர் மோடிக்கு இருக்கிறது" இது பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையின் பேச்சு.

அடடே, எவ்வளவு அருமையான பிரதமர் கிடைத்திருக்கிறார். தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? என்று அண்ணாமலை அங்கலாய்க்கிறார்.

### ஓரவஞ்சனை!

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு பிரதமர் மோடி ஆற்றிய பணிகள் என்ன? ஒன்றிய



அரசு தமிழ் மொழிக்காக என்ன செய்கிறது?

உலகின் தொன்மையான தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒன்றிய பாஜக அரசு, 2017 – 2020 ஆகிய 3 ஆண்டுகளில் 22.85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதே காலத்தில் 24,821 பேர் மட்டுமே பேசக் கூடிய சமஸ்கிருத மொழிக்கு 643.84 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

இது பற்றி நாடாளுமன்றத்தில் ஒன்றிய கலாச்சாரத்துறை அமைச்சர் விளக்கம் அளித்துள்ளார். அதன்படி, "மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ராஷ்டிரிய சமஸ்கிருத சன்ஸ்தானத்தை நிறுவி, அதற்கு மூன்று ஆண்டுகளில் (2017 – 2020) 643.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017 – 18 ல் 198.31 கோடி ரூபாய். 2018 – 19 ல் 214.28 கோடி ரூபாய். 2019 – 20ல் 231.13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளன" என்று ஒன்றிய அமைச்சர் கூறுகிறார்.

இதே காலத்தில், தன்னாட்சி அமைப்பான செம்மொழி தமிழாய்வு நிறுவனம் மூலம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 2017 – 18 ஆம் ஆண்டில் 10.59 கோடி ரூபாய். 2018 – 19 ல் 4.56 கோடி ரூபாய். 2019 – 20ல் 7.7 கோடி ரூபாய் என குறைவான நிதியையே ஒதுக்கீடு செய்துள்ளது.



தெலுங்கு, கன்னட மொழிகளுக்கு இதைவிட பெரும் ஓரவஞ்சனை. 2017 – 2020 வரையிலான 3 ஆண்டுகளில் தலா 3.06 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மலையாளம், ஒடியா மொழிகளுக்கு எந்த நிதியும் ஒதுக்கவில்லை.

அதாவது, செம்மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய ஐந்து மொழிகளுக்கும் 29 கோடி ரூபாய். சமஸ்கிருத மொழிக்கு மட்டும் 643.84 கோடி ரூபாய். இந்தியாவின் எந்தப் பகுதியிலும் மக்களால் பேசப்படாத ஒரு மொழிக்கு 22 மடங்கு அதிகமான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.


இதுதான் பிரதமர் மோடியின் அளவில்லா தமிழ்ப் பற்று (?). தமிழனாக பிறக்கவில்லையே என்று அவர் குறைபடுவதன் லட்சணம். இவற்றைத்தான் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை ஊர் ஊராகப் பேசி வருகிறார். மற்றொரு ஒன்றிய அமைச்சர் அமித்ஷா தமிழில் பேச முடியவில்லையே என வருத்தப்பட்டு மன்னிப்பு கேட்கிறார்.

"யோக்கியன் வருகிறான், செம்பை எடுத்து உள்ளே வை" என்றொரு பழமொழி கிராமங்களில் சொல்லப்படுவதுண்டு. தமிழ் மொழி, தமிழர்களின் வரலாறு, இலக்கியம் என பேசிக்கொண்டு பாசிஸ்டுகள் வருகிறார்கள். தமிழர்களே விழிப்போடு இருங்கள்.

### சோழனுடைய செங்கோல்!

"இந்தியாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட செங்கோல்கள் இருக்கின்றன. ஆனால் சோழனுடைய செங்கோல் தான் வேண்டும் என்று கேட்ட மோடிஜி நமக்குத் தலைவர் இல்லையா?

102 ஆண்டுகளாக ஆங்கிலேயர்கள் கட்டிய பாராளுமன்றத்தில் இருக்கிறோம். அதனால் புதிய பாராளுமன்றம் கட்ட வேண்டும் என மோடிஜி முடிவு எடுக்கிறார். அந்தப் பாராளுமன்றத்தில் தமிழ் மொழிதான் முதலில் ஒலிக்க வேண்டும். அதுவும் தேவாரத்தில் உள்ள கோளறு பதிகம் ஒலிக்க வேண்டும் என பிரதமர் நினைக்கிறார். இது தமிழ் கலாச்சாரத்துக்கு கிடைத்த பெருமை. தமிழனுக்கு கிடைத்த பெருமை இல்லையா!" என்று புல்லரிக்க வைக்கிறார் அண்ணாமலை.



மக்களாட்சியின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் நம்பிக்கையுள்ள எவரும் இப்படிப் பேச மாட்டார்கள். ஆனால் அண்ணாமலைக்கும் அவர் சார்ந்திருக்கும் பாஜக, ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளுக்கும் இது பொருந்தாது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழாவில், மீனாட்சி அம்மனுக்கு வைர கிரீடம் சூட்டி, நவரத்தின கற்கள் பதிக்கப்பட்ட தங்கத்தினால் ஆன செங்கோல் வழங்கப்படுவது வழக்கம். சித்திரை திருவிழாவின் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் இது நடந்து வருகிறது.

மீனாட்சி அம்மன் கோவிலில் வண்ண ஓவியங்களும் உள்ளன. அதில் மீனாட்சியம்மன் அரசருக்கு செங்கோல் வழங்கும் காட்சி உள்ளது. அதாவது, அரசன் மக்களிடமிருந்து அதிகாரத்தையோ ஆட்சியுரிமையையோ பெறவில்லை. மாறாக மீனாட்சி அம்மனிடம் இருந்தே அவற்றைப் பெறுகிறான். இது அரசாட்சியின் தெய்வீக உரிமை என்று அழைக்கப்படுகிறது.

எதார்த்த வாழ்க்கையில், எந்த மன்னருக்கும் மீனாட்சி அம்மனால் செங்கோல் எடுத்துக் கொடுக்க முடியாது. அவர் சார்பாக அங்குள்ள பார்ப்பன பூசாரி அதனை எடுத்துக் கொடுக்கிறார். எனவே, செங்கோல் வழங்குவது என்பது தெய்வீக உரிமைக் கோட்பாட்டிலும் பார்ப்பனிய மேலாதிக்கத்திலும் வேரூன்றியுள்ளது.

இந்தியா விடுதலை பெற்ற போது இந்த தெய்வீக உரிமை கோட்பாட்டின் அடையாளமான செங்கோல் வழங்குவது நிராகரிக்கப்பட்டது. அதன் பிறகும் இத்தனை ஆண்டு காலமாக ஜனநாயக இந்தியா அதனைக் கண்டுகொள்ளவில்லை.

செங்கோல் வழங்குவது, 75 ஆண்டுகளாக நாம் பேசி வரும் ஜனநாயகம், சமத்துவம், சம வாய்ப்பு, மக்களுக்கே அதிகாரம், மக்களே ஆட்சியுரிமைக்கான ஆதாரம் என்ற கொள்கைகளுக்கு முற்றிலும் எதிரானது. அரசியலமைப்புச் சட்டத்தை நிராகரிக்கக் கூடியது.

அரசியல் நிர்ணய சபையில் நடைபெற்ற விவாதம் ஒன்றில் பேசிய நேரு, மக்களுக்கே இறையாண்மை; மக்களிடமே இறையாண்மை என்பதை உறுதிபட எடுத்துக் கூறுகிறார்.

இதனால்தான் நாடு விடுதலை பெற்ற போது, செங்கோல் வழங்குவதை நேரு கண்டுகொள்ளவில்லை. தேடிச் சென்று கொடுத்த செங்கோலையும் காட்சிப் பொருளாக வைக்க சொன்னார். அது தவறானதோ விமர்சிக்க வேண்டியதோ அல்ல.

திருவாங்கூர் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைக்க முடியாது என அதன் திவானாக இருந்த சர். சி.பி.ராமசாமி ஐயர் மறுக்கிறார். பத்மநாபசாமி ஆளும் சமஸ்தானத்தை இணைப்பது குறித்துப் பேச முடியாது என்கிறார். ஆனால், ஆங்கிலேயர்களுக்கு அடிபணிந்த உங்களால் இந்தியாவுடன் இணைய முடியாதா? என்று சர்தார் பட்டேல் காட்டமுடன் கேட்டார். அவர்கள் வைத்த வாதங்களை ஏற்க மறுத்து திருவாங்கூர் சமஸ்தானம் இணைக்கப்பட்டது.

நிலப்பிரபுத்துவ மன்னராட்சி கால வழக்கங்களை மீண்டும் உயிர்ப்பிப்பது இந்துராஷ்டிரா அமைக்கும் ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் கனவுகளுக்கு உதவக் கூடும். ஆனால் நாட்டின் ஜனநாயகத்திற்கும் அரசியலமைப்பு சட்டப்படியான குடியாட்சிக்கும் எதிரானது. குழிபறிக்கக் கூடியது.

இதனை தமிழர்களின் வரலாறு, தமிழ் கலாச்சாரம், தமிழர்களின் பாரம்பரியம் என்ற பெயரில் அண்ணாமலையும் அவர் சார்ந்த சங் பரிவாரமும் திணிக்க முயற்சிப்பதை தமிழ் மக்கள் எக்காலத்திலும் ஏற்க மாட்டார்கள்.

இன்றைய நவீன சமூகத்தில் தெய்வீக உரிமை கோட்பாட்டையும் மன்னராட்சி கால அதிகார வழக்கங்களையும் மீண்டும் கொண்டு வருவது நினைத்துப் பார்க்க முடியாதது. பாசிசத்திற்கே வழிவிடக் கூடியது.

தொடர்புக்கு: 9500001224

# பிரதமர் மோடியை வரலாறு மன்னிக்காது!

தற்போதைய இந்தியர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது, கவிஞர் கண்ணதாசன் கவிதையே எனக்கு நினைவிற்கு வருகிறது !?

**"நெருப்பினை நிலவே என்பார் !**
**நீசனை தலைவா என்பார் !**
**கருப்பினை வெண்மை என்பார் !**
**கழுதையை யானை என்பார் !**
**உருப்படாதவனை எல்லாம்**
**உயரத்தில் ஏற்றி வைப்பார் !**
**செருப்பையே மதிக்கும்**
**இத்தேசத்தில் பிறந்தேன் பாவி"**

என்று தன்னையே நொந்து கொண்டான் !

இந்தியர்களே,

பொன்நிறத்தோடு துள்ளி ஓடும் மஞ்சள் நிறமான், மானல்ல மாரீச அரக்கன் !

இராமன் அம்பு பட்டு மடியும் போது, மானாக இருந்த மாரீச அரக்கன்,

இராமன் குரலில், "இலட்சுமணா ... சீதா என்று அலறினான் !

அலறியது இராமனல்ல...! மாரீச அரக்கன் !

இந்தியாவின் பாரம்பரிய சொத்து வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதே !

விரோத, குரோத, பகைமைக்கு எதிராக அன்பை, சகோதரத்துவத்தை முன்வைப்பதே இந்தியாவின் பண்பாடு !

இதை ஒழித்துக் கட்டியது மோடி ஆட்சி !

இந்து சாஸ்திரக் கடலில் மூழ்கி முத்தெடுத்துக் கரை ஏறிய ஞானி விவேகானந்தர் !

அவர், "**இந்தியாவின் தலை மீது பெண்ணடிமைத்தனமும், தீண்டாமையும் இரண்டு பெரும் பாவங்களாகக் கவிழ்ந்து கிடக்கின்றன !"**

– என்று அடையாளம் காட்டினார் சுவாமிஜி !

அந்த இரண்டு பெரும் பாவங்களைக் களைய மோடி அரசு ஏன் முனைப்புக் காட்டவில்லை?

பாபர் மசூதியை இடித்து இராமர் கோவில் கட்டச் சொன்னாரா விவேகானந்தர்?

அவர் எச்சரித்தபெண்ணடிமைத்தனத்தை நீக்க, மோடியின் திட்டம் என்ன?

தீண்டாமையை முற்றிலும் ஒழித்துக் கட்ட திட்டம் என்ன?

இது குறித்து வாய் திறப்பாரா மோடி?

கணவன் இறந்தவுடன் மனைவியையும் எரியும் சிதையில் போட்டு எரித்தது தானே சனாதனம்?

அந்தக் கொலைத்தனம் மீண்டும் அரியணையிலா?

பட்டியலின மக்கள் நரவேட்டைக்கு ஆட்பட்டுக்கிடப்பதை தடுத்தாரா மோடி?

இராமனை வைத்து அரசியல் சூதாட்டம் நடத்தும் மோடியை வரலாறு மன்னிக்காது, தண்டித்தே தீரும் !

**–கே.சுப்பராயன்** MP

# ராமர் சிலைக்கு கல் எடுக்கப்பட்ட கிராமத்தில் பாஜக எம்பி விரட்டியடிப்பு

அயோத்தி ராமர் சிலை செய்வதற்கு கர்நாடக மாநிலம் மைசூரு குடகு தொகுதியில் உள்ள குஜ்ஜேக வுடனபுரா கிராமத்திலிருந்து கல் எடுக்கப்பட்டு இருந்தது. ராமர் கோவில் திறப்பு நாளான திங்க ளன்று குஜ்ஜேகவுடனபுரா கிரா மத்திற்கு மைசூரு குடகு தொகுதியின் மக்களவை உறுப்பினரான பாஜகவைச் சேர்ந்த பிரதாப் சிம்ஹா பூஜை செய்வதாக கூறி பயணம் மேற்கொண்டார்.

இதனை அறிந்த குஜ்ஜேகவுடனபுரா கிராம மக்கள் பிரதாப் சிம்ஹாவை எல் லையிலேயே தடுத்தி நிறுத்தினர். சொந்த தொகுதியின் கிராமத்தி லேயே பிரதாப் சிம்ஹாவை அனு மதிக்க முடியாது என பொதுமக்கள் தொடர் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தில் பங்கேற்ற குஜ்ஜேகவுடனபுரா கிராமவாசி ஒருவர் கூறுகையில்,"பிரதாப் சிம்ஹா தலித்துகளுக்கு எதிரானவர். தனது தொகுதியில் உள்ள குஜ்ஜேகவுடனபுரா கிராமத்திற்கு அவர் ஒரு முறை கூட வருகை தந்தது இல்லை. தலித் மக்களை தொடர்ந்து புறக்கணித்து வரு கிறார். மேலும் தலித் மக்களை இழிவுபடுத்தும் வகையிலும் பேசி வருகிறார். இதனால் அவரை கிரா மத்திற்குள் அனுமதிக்க மாட் டோம்" என அவர் கூறினார்.

### நாடாளுமன்றத்தில் புகைக்குப்பிகளை வீசியவர்களுக்கு பாஸ் வழங்கிய அதே "பிரதாப் சிம்ஹா"

கடந்த ஆண்டு டிசம்பர் 13 அன்று நாடாளுமன்ற மக்களவையில் நுழைந்த 2 பேர் வண்ண புகைக்குப்பிகளை வீசி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி னர். இதுதொடர்பாக 6க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்ட நிலையில், நாடாளுமன்றத்தில் புகைக்குப்பிகளை வீசியவர்களுக்கு பாஸ் வழங்கிய பிரதாப் சிம்ஹாதான் திங்க ளன்று தனது சொந்த தொகுதி யில் பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் புகைக்குப்பி வீச்சு தொடர்பாக தனது பெயர் அடிபட்டதிலிருந்து காணாமல் போன பிரதாப் சிம்ஹா கடந்த 3 நாட்களுக்கு முன்,"மைசூரு பகுதியில் இருந்து அயோத் திக்கு சிறப்பு ரயில் இயக்கப் படும்" எனக் கூறி வெளியுலகத் திற்கு தலைகாட்டினார். ஆனால் அடுத்த ஒரே நாளில் பொதுமக்கள் முற்றுகையால் சொந்த தொகுதிக்கு கூட செல்ல முடியாமல் வந்த வழியிலேயே இன் னல்களை சந்தித்துள்ளார்.

# ராமர், க

**இன்றைய காலகட்டத்தில் ராமரைப் பற்றி நிறைய பேசுகிறார்கள். ராமரை இந்தியாவின் அடையாளமாக மதவாத அரசியல் காட்டுகிறது. காலம் காலமாக ராம காதை நமது நாட்டில் வழக்கத்தில் இருந்தாலும், அது மதம் சார்ந்ததாக மட்டுமே இருந்தது.**



எஸ்.தோத்தாத்திரி

ஆனால் இன்றைக்கு அது அரசியல் அடையாளம். வெகுஜன ஊடகங்களில் பலர், ராமர் பற்றி கதைகளைப் பேசுகிறார்கள். அவர்கள் வால்மீகி ராமாயணத்தை பற்றியே அதிகம் பேசுகிறார்கள். தமிழில் உள்ள கம்பராமாயணம் பற்றி பெரும்பாலானோர் பேசுவதில்லை.

இவர்கள் பிராமணிய சிந்தனை வயப்பட்டவர்கள் என்பதே அதன் காரணம்.

இதனையும் மீறி, கம்பனைப் பற்றி ஒரு சிந்தனை போக்கை முன்வைத்தவர் மகாகவி பாரதி ஆவார். கம்பர் வழியாக அவர் ராமனை பார்க்கிறார்.

**"கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்"**

**"கம்பன் கவியெல்லாம் நான்"**



**"எல்லை ஒன்றின்மையை குறிகளால் காட்டிட கம்பன் முயன்றதும்"**

போன்ற அவரது கவிதை வரிகள், ராமகாதையை எழுதிய கம்பரை பற்றிய அவரது உயர்வான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

மூன்று வகையான சிந்தனை போக்கிற்கு பாரதி கம்பனை பயன்படுத்துகிறார்.

ஒன்று மனித நேயம்

இரண்டு கவிதை தன்மை

மூன்று தத்துவ அணுகுமுறை

இன்றைய காலத்திற்கு பொருத்தமானது !

இவற்றில் தத்துவ அணுகுமுறை பற்றி இங்கே நாம் அதிகம் பேச வேண்டாம். வைணவ சமய காப்பியமாக இருந்தாலும் கடவுள் நிலை என்று வரும்போது கம்பர் ஒரு மத சமரச நிலையையே பின்பற்றுகிறார்.

இதனை ஒவ்வொரு காண்டத்திற்கும் அவர் எழுதியுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களில் காணலாம். முதல் பாடலான "அலகிலா விளையாட்டு உடையார்" என்பதில் எந்தக் கடவுளையும் அவர் குறிப்பிட்டு பாடவில்லை. இந்த கருத்துக்கு விளக்கம் தருவது போல் யுத்த காண்டத்தில் உள்ள பின்வரும் கடவுள் வாழ்த்து பாடல் அமைந்துள்ளது

**ஒன்றே என்னின் ஒன்றேயாம்;**
**பலவென்(று) உரைக்கில் பலவேயாம்;**
**அன்றே என்னின் அன்றே யாம்;**
**ஆமே என்னின் ஆமேயாம்;**
**இன்றே என்னின் இன்றேயாம்;**
**உள(து) என்(று) உரைக்கின் உளதேயாம்;**
**நன்றே நம்பிக் குடி வாழ்க்கை;**
**நமக்(கு) இங்(கு) என்னோ பிழைப்(பு) அம்மா !**

கடவுள் ஒருவன் என்று கூறினாலும் சரிதான், பல கடவுள்கள் என்று கூறினாலும் சரிதான், கடவுள் எல்லாவற்றிலும் என்று கூறினாலும் சரிதான், கடவுள் இல்லை என்று கூறினாலும் சரிதான், இவ்வாறு இருக்கும் போது இந்தக் கடவுளை நம்பி நாம் எவ்வாறு பிழைப்பது?

என்று கம்பன் கூறுகிறான். இங்கு ஆத்திகவாதம், நாத்திகவாதம், ஒரு கடவுள் வாதம், பல கடவுள் கொள்கை ஆகியவை எல்லாமே முன்வைக்கப்படுகின்றன. எனவே இதை நம்பி சண்டையிடுவதையும் பேசுவதையும் நாம் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இது இன்றைய காலத்துக்கு பொருத்தமானது.

இத்தகைய தத்துவ விளக்கத்துக்கு பல ஆதாரங்களை இந்திய தத்துவத்தில் இருந்து நான் கூறிக் கொண்டே செல்லலாம். கம்பன் இத்தகைய கடவுள் கொள்கையை முன் வைப்பதற்கு காரணம் அவனது காலத்தில் சமய சண்டைகள் அதிகமாக இருந்தன என்பது வரலாற்று உண்மையாகும்.

### பன்முக கண்ணோட்டம்!

இது பற்றி விரிவாக காண்பதற்கு இங்கே இடமில்லை. ஜீவா அவர்கள் கம்பனை ஏன் கையில் எடுத்தார்கள் என்பதையும், கம்பன் மூலமாக ஜீவா முன்னிறுத்தும் கருத்துக்களையும் காண்பது அவசியமாகிறது. ஜீவா வாழ்ந்த காலத்தில், கம்பனை நன்கு கற்ற அறிஞர்கள் பலர் இருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் கம்பனை ரசித்தவர்கள். ஒரு சிறு பகுதியினர்கம்பன்பற்றிய ஆய்வில் ஈடுபட்டவர்கள். மற்றொரு சாரார் கம்பராமாயணத்தை சொற்பொழிவுகள் மூலம் தமிழ்நாட்டில் பரப்பிக் கொண்டு இருந்தனர். இவர்கள் அரசியல் சாராதவர்கள்.



அதே சமயத்தில் தமிழகத்தின் அரசியல் இயக்கங்களைச் சார்ந்தவர்களும் கம்பராமாயணத்தைப் பயன்படுத்த தொடங்கினர். இவர்களில் திராவிட இயக்கத்தை சார்ந்தவர்கள் கம்பன் மீது எதிர்மறையான விமர்சனத்தை வைத்தனர். அது தமிழகத்தில் தோன்றிய நிலப்பரப்புத்துவ சிந்தனைகளை எதிர்த்ததன் விளைவாகும். இவர்களை எதிர்த்து பல கம்பராமாயண அறிஞர்கள் பல கட்டுரைகளை வெளியிட்டனர்.

இந்தக் கட்டத்தில் பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த ஜீவா கம்பராமாயணம் பற்றிய ஒரு ஆக்கபூர்வமாக விளக்கத்தை முன் வைத்தார்.மார்க்ஸியத்தின் ஒரு விதி, 'மறுப்பின் மறுப்பு' என்பதாகும். மார்க்சியம் ஒன்றை மறுக்கும்போது, ஒரு முந்தைய அமைப்பின் ஆக்கபூர்வமானவற்றை ஏற்றுக் கொள்கிறது. எதிர்மறையானவற்றை விமர்சனத்திற்கு உள்ளாக்குகிறது. அதன் விளைவாக ஒரு புதிய பாதையை அது உருவாக்குகிறது. எல்லாவற்றையும் எதிர்மறையாக கருதி அழித்து விட்டால் நல்லவைகள் எவையுமே இருக்காது. இது அராஜகவாதத்தையும் இன்மை வாதத்திலும் கொண்டு விடும்.

### ஜீவாவின் கம்பன்!

இதற்கு மார்க்சியத்தின் வரலாறே சாட்சியாகும். இதுதான் ஜீவாவின் பாதையாகும். அவர் ஏற்றுக்கொண்ட பொதுவுடமை கருத்துக்களுக்கு உடன்பாடான அம்சங்களை தன் வயப்படுத்திக் கொண்டு, மாறாக உள்ளவற்றை தவிர்த்து விட்டார்.

ஒரு பொதுவுடமைவாதியின் லட்சியம், சோசியலிசம் பற்றி பேசுவது. சோசியலிச சமுதாயத்தை அமைப்பதற்கு வெறும் தொழிற்சங்க போராட்டம் மட்டும் போதாது. அதற்கு இணையாக அரசியல் போராட்டமும் வேண்டும். அதன் இணையாக கருத்தியல் போராட்டமும் வேண்டும். அரசியல்வாதியாக இருந்த ஜீவா தொழிற்சங்க போராட்டத்திலும் தீவிரம் காட்டினார். அதே சமயத்தில் கருத்தியல் போராட்டத்திலும் கால் பதித்தார்.

அவரது இறுதி லட்சியமானது சோசியலிசம்.

திரைப்படத் துறையில் இடதுசாரிகளால் அதிகம் செய்துவிட முடியவில்லை. அதற்கு காரணம் அது பூர்ஷுவா சாதனமாக மாறிவிட்டது. அதில் இடதுசாரி கருத்து உள்ளவர்களை நுழைய விட மாட்டார்கள்.

அதே சமயத்தில் தத்துவம், இலக்கியம் ஆகியவை இருக்கின்றன. இந்தத் துறைகளில் இடதுசாரிகள் தீவிரமாக செயல்படத் துவங்கினர். ஆனால் இவை இரண்டும் வெகுஜன கலாச்சாரத்தைச் சாராதவை.

தரமான இலக்கிய விளக்கம்!

எனவே இந்த எல்லைக்குள் இருந்து கொண்டு தான், ஜீவா தன்னுடைய லட்சியத்திற்கு ஏற்ற கருத்துக்களை முன் வைக்க வேண்டி இருந்தது. அதற்கு அவர் பாரதியின் சிந்தனைகளையும், கம்பனின் சிந்தனைகளையும் ஒரு புதிய கோணத்தில் விளக்க முற்பட்டார். இந்த விளக்கமானது ஒரு இலக்கியத் தரம் வாய்ந்த விளக்கமாகும். அதே சமயத்தில் கொள்கை விளக்கமாகவும் அமைந்து விடுகிறது. இது கம்பன் பற்றிய ஒரு இடதுசாரி விமர்சனமாகவும் அமைந்து விடுகிறது

சோசியலிசம் என்ற கருத்தை மனதில் வைத்துக்கொண்டு ஜீவா கம்பனை அணுகுகிறார். இதனை அவர் மூன்று கூறுகளாகப் பிரித்துக் கொள்கிறார்.

- சமத்துவம் பற்றிய கம்பனது கருத்து;
- சகோதரத்துவம் பற்றிய கருத்து;
- மனிதநேயம் பற்றிய கருத்து.

மற்றொரு கருத்தை எடுத்துக் காட்டியுள்ளார். அது சகோதரத்துவமாகும். இதற்கு அவர் குகப்படலம், விபீடணன் அடைக்கலப் படலம் ஆகியவற்றில் உள்ள பல பாடல்களை சுட்டிக் காட்டுகிறார். விபீடனனை ராமன் தன்னுடைய சகோதரனாக ஏற்றுக் கொள்கிறான். குகனை ஐந்தாவது சகோதரனாகவும், சுக்ரீவனை ஆறாவது சகோதரனாகவும் ராமன் ஏற்றுக் கொள்கிறான்.

அதுமட்டுமல்ல குகனுக்கு இலக்குவனை அறிமுகம் செய்யும்போது, இலக்குவனை குகனின் தம்பியாகவும், சீதையை கொழுந்தியாளாகவும் கூறுகிறான். தன்னோடு மட்டும் அல்லாமல் தன் உறவினர்களையும் சகோதரத்துவ கொள்கையில் கொண்டு வருகிறார். இதைத்தான் ஜீவா மிக அழுத்தமாக கூறுகிறார்.

வால்மீகி, கம்பனுக்கு ஒரு படி மேலே சென்று இருக்கிறார். ராமன், ராவணனைக் கொன்ற பிறகு, அவனுக்கு ஈமக்கிரியைகள் யார் செய்வது என்ற கேள்வி எழுகிறது. விபீடணன் தயங்குகிறான். ராமன் அவனைப் பார்த்து உன்னை என் தம்பியாக ஏற்றுக் கொண்டிருக்கிறேன்; எனவே இராவணன் என் சகோதரனாகி விடுகிறான். ஆகையினால் நீ செய்யாவிட்டால் நான் கிரியைகளை செய்வேன் என்று கூறுகிறான்.

கம்பர் அதற்கும் மேல், ஒரு படி செல்கிறார். விபீடணனை சகோதரனாக ஏற்றுக் கொண்ட பிறகு, தயரதனை விபீடணனின் தந்தையாகக் காட்டுகிறார். இதற்குரிய பாடல் பின்வருமாறு

# கம்பர், ஜீவா





இவை அனைத்தும் கம்பனது காப்பியத்தில் பரவிக் கிடக்கின்றன.

ஜீவா கம்பனது நாட்டுப் படலத்தை எடுத்துக் கொள்கிறார். பின்வரும் இரு பாடல்கள் சமத்துவம் பற்றிய கருத்தை எடுத்துக்காட்டுவதாக அவர் கூறியுள்ளார்.

**“கல்லாது நிற்பார் பிறர்**
**இன்மையின் கல்வி முற்ற**
**வல்லாரும் இல்லை; அவை**
**வல்லர் அல்லாரும் இல்லை**
**எல்லோரும் எல்லாப் பெரும்**
**செல்வமும் எய்துதலாலே**
**இல்லாரும் இல்லை;**
**உடையாரும் இல்லை, மாதோ!”**

**“வன்மை இல்லை, ஓர்**
**வறுமை இன்மையால்;**
**திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்;**
**உண்மை இல்லை பொய் யுரை யிலாமையால்;**
**வெண்மை இல்லை பல கேள்வி மேவலால்”**

இந்த இரண்டு பாடல்களை முதலில் தொட்டுக் காட்டியவர் ஜீவா தான். இவற்றை பின்னால் வந்த பலர் மேற்கோளாக காட்டியிருக்கிறார்கள்.

**இவற்றில் இரு கூறுகள்!**

முதல் பாடலில் உள்ளது பொருளாதார சமத்துவம். அதைத்தான் அந்தப்பாடலின் இரண்டுவரிகள் கூறுகின்றன எல்லோரும் எல்லா வளங்களையும் பெற்றுள்ளதால், அங்கு இருப்பவர்களும் இல்லை, கொடுப்பவர்களும் இல்லை.

இரண்டாவது பாடல் ஒரளவுக்கு சிந்தனை சமத்துவத்தை குறிப்பிடுகிறது. கோசல நாட்டில் வறுமை என்பதே இல்லை, ஆகையினால் அங்கு வள்ளல் தன்மை என்பது கிடையாது. அந்த நாட்டிற்கு பகைவர்களே இல்லை, ஆகையினால் வலிமை என்பது பற்றி யாருக்கும் தெரியாது. அந்த நாட்கள் பொய் பேசுபவர்களே இல்லை, எனவே உண்மை என்பதைப் பற்றியும் தெரியாது. எல்லோரும் படித்தவர்கள், ஆகையினால் அறியாமை என்பதும் கிடையாது. இத்தகைய லட்சிய சமுதாயத்தை ராமன் இருக்கும் இடமாக கம்பன் சித்தரிக்கிறான்.

நாட்டுப் படலத்தில் உள்ள இயற்கை வர்ணனை முழுவதுமே இக்கருத்துக்களை பிரதிபலிப்பதாகவே உள்ளன. இது ஒரு வகையான கற்பனாவாத சோசலிசமாகும். இதனை பேராசிரியர் நா. வானமாமலை நிலப்பிரபுத்துவ சோசலிசம் என்று அழைக்கிறார்.

மேலைநாட்டு புருதான் என்பவர் இத்தகைய அமைப்பு பற்றி பேசியுள்ளார். தாமஸ் மூர் என்பவரும் இத்தகைய கற்பனையான சமுதாயத்தை பற்றி பேசியுள்ளார். இதனை ஒவ்வொரு பொதுவுடமைவாதியும் மனதில் கொள்ள வேண்டும்.

**சகோதரத்துவ கருத்துகள்!**

ஜீவா அவர்கள் கம்பராமாயணத்தில் காணப்படும்

**“குகனொடு ஐவரானோம் முன்பு,**
**பின் குன்று சூழ்வான்**
**மகனொடு அறுவரானோம்;**
**எம்முழை அன்பின் வந்த**
**அகன் அமர் காதல் அய்ய!**
**நின்னுடன் எழுவரானோம்;**
**புகல் அரும் கானம் தந்து**
**புதல்வரால் பொலிந்தான் நுந்தை”**

இந்தப் பகுதிகள் சகோதரத்துவத்தின் உச்சத்தை காட்டும் பகுதிகளாகும். அதே சமயத்தில் இவற்றில் மனிதநேயம் இழையோடிக் கொண்டிருப்பதையும் காண முடியும்.

**மனித நேயம்!**

யுத்த காண்டத்தில் ஒவ்வொருவரையும் அழிக்கும் பொழுது அவர்களது நற்பண்புகளையும் ஏற்றுக் கொள்கிறார். கும்பகர்ணனை அனுதாபத்தோடு பார்க்கிறார். ராவணனை அழிக்க வேண்டுமே என்று கூட வருத்தப்படுகிறார். தயரதனிடம் வரம் கேட்கும் பகுதியில், மனித நேயத்தின் சிகரத்தை காண முடியும்.

தனக்கு பெரும் துன்பத்தைக் கொடுத்த கைகே யியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ராமன் தந்தை யிடம் கேட்கும் போது மனிதநேயத்தின் உச்சத்தைக் காணமுடிகிறது

ஆக எல்லோரும் வாழ வேண்டும் என்ற சமத்துவ சமுதாயம் கம்பனது இந்த காவியத்தில் லட்சிய சமுதாயமாக அமைகிறது. இதன் உள்ளாக சகோதரத்துவம், மனிதநேயம் ஆகியவை இடம் பெறுகின்றன. இவை அனைத்தையும் உள்ளடக்கிய பொற்கால கனவைக் கண்டவன் கம்பன்.

கம்பனின் இராமன் ஒரு ஆதிக்க நாயகன் அல்ல. மனிதன் தெய்வமாக மாறிய கட்டம் என்று கூறுவார்கள். இங்கு தெய்வத்தை விட கம்பன் மானுட பண்புகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறான்.

''மானுடம் வென்றதம்மா'' என்ற வரிகள், அவருடைய வழியைக் காட்டுகின்றன

(இக்கட்டுரை ஜீவா அவர்கள் கூறியதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அவர் கூறாத சில அவர் வழியில் நின்று விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொதுவுடமைவாதியும் இதனை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்)

# துப்பாக்கிச் சூட்டில் பலியான வால்பாறை தியாகிகள்!

கோவை மாவட்டத்தில் பஞ்சாலைத் தொழிலாளர்களின் போராட்டத்தால் உத்வேகம் பெற்ற தேயிலை தோட்ட தொழிலாளர்கள் செங்கொடி சங்கத்தில் அணிதிரண்டனர்.

வால்பாறை என்பது மலை பிரதேசம். தேயிலை தோட்டங்களில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்தனர். மலைத் தோட்டங்களில் கடும் குளிரிலும், அட்டைப் பூச்சி கடியிலும், பாம்பு உள்ளிட்ட விச ஜந்துக்களிடையே வாழும் சூழ்நிலை.

தேயிலை தோட்ட முதலாளிகள் தங்கள் எஸ்டேட்டுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்த கூலி, 12 மணி நேர வேலை எந்த வித அடிப்படை உரிமையும் இல்லாமல் அடிமைகளைப் போல் நடத்தி வந்தனர்.

12 மணி நேர வேலைக்கு, குறைந்த பட்ச கூலி ஒரு நாளைக்கு ஆண்களுக்கு ஏழரை அணா, பெண்களுக்கு ஐந்தரை அணா, என வழங்கப்பட்டு வந்தது.

தோழர் விருத்தகிரி, பார்வதி கிருஷ்ணன் உள்ளிட்ட தலைவர்கள் 1952 ஆம் ஆண்டுகளில் தோட்டத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கி, தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

1952 – 57 ஆம் ஆண்டுகளில் சம்பள உயர்வு கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு கவனத்திற்கும் அன்றைய முதல்வர் காமராஜர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. போராட்டங்கள் தொடர்ந்தன.

அரசு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரையாக ஒரு நாளைக்கு 2 ரூபாய் 25 பைசா கூலி உயர்வு தர வேண்டும் எனவும் 1952 ஆம் ஆண்டிலிருந்து கணக்கிட்டு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது.

தேயிலைத் தோட்ட முதலாளிகள் தீர்ப்பை அமலபடுத்த மறுத்தனர். தொடர்ந்து கோரிக்கைகளை வலியுறுத்திய ஏஐடியுசி தோட்டத் தொழிலாளர் சங்கம் மீண்டும் போராட்டத்தை அறிவித்தது.

அதன்படி 1957 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று அரசு அமைத்த குழுவின் பரிந்துரையை அமல்படுத்த கோரி பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் வால்பாறை காவல் நிலையத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் ஒன்று கூடி கோரிக்கை முழக்கம் எழுப்பினர்.

நாடு முழுவதும் குடியரசு தின விழா கோலாகலமாக நடைபெற்று கொண்டிருந்த வேளை. வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்தை நசுக்கும் வகையில் முதலாளிகள் காவல் துறையை ஏவி விட்டு போராடிய தொழிலாளர் மீது அராஜகத்தை கட்டவிழ்த்து விட்டனர்.

கண்மூடித்தனமாக துப்பாக்கி சூடு நடத்தினர். துப்பாக்கி குண்டு பாய்ந்து செங்கொடி சங்கத்தின் முன்னணி ஊழியர்களான அப்பாரு, குருசாமி, பழனி, ஞானமுத்து ஆகிய நால்வரும் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்.

தகவல் அறிந்து வால்பாறை சென்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பார்வதி கிருஷ்ணன் காவல் துறையை எதிர்த்து ஆவேசமாக போராடினார். அதற்குப் பின்னர்தான் குண்டடிப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்த தொழிலாளர்கள் உடல்களை காவல் துறையினர் ஒப்படைத்தனர்.

இதுகுறித்து முதல்வர் காமராஜரை சந்தித்த பார்வதி கிருஷ்ணன் நடந்தவற்றை தெரிவித்துடன் காவல்துறை மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

துப்பாக்கிச் சூட்டையும், படுகொலைகளையும் கண்டித்து தடை உத்தரவையும் மீறி வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது. தொடர்ந்து போராடியதன் விளைவாக ஏ ஐ டி யு சி சங்கம் வலிமை பெற்றது. தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளும் கோரிக்கைகளும் வெற்றி பெற்றது.

வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்தில் தொழிலாளர் நலன்களுக்காக தன் உயிரைத் தந்த தியாகிகளுக்கு வீரவணக்கம்.

வால்பாறை தியாகிகள் தினம் 1957 ஜனவரி 26.

**– இரா. துரைசாமி**

தொடர்புக்கு: 9940480356

# உச்ச நீதிமன்ற தடை உத்தரவு நல்லிணக்கம் பேண ஊக்கம் அளிக்கும்

**இரா.முத்தரசன் அறிக்கை**



உச்ச நீதிமன்ற தடை உத்தரவு நல்லிணக்கம் பேண ஊக்கம் அளிக்கும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

மதுராவில் உள்ள ஷாஹி ஈத்கா மஜித் இருக்கும் இடம் இந்துக்களின் நம்பிக்கை கடவுள் கிருஷ்ணன் பிறந்த பூமி என அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் 17 முறையீட்டு மனுக்கள் விசாரணையில் உள்ளன. நீதிமன்றத்தில் விசாரித்து வருகிறது. இந்த முறையிட்டு மனுக்களை விசாரித்து வரும் அலகாபாத் உயர்நீதி மன்றம் ஷாஹி ஈத்கா மஜித் வளாகத்தை ஆய்வு செய்து, நீதிமன்றத்துக்கு அறிக்கை அளிக்க மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு அமைப்பது என்று ஜனவரி 4 ஆம் தேதி உத்தரவிட்டது. இதன் மீது ஈத்கா மஜித் கமிட்டியின சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேல் முறையீட்டை விசாரித்த விசாரித்த உச்ச நீதிமன்றம் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக் குழுவுக்கும், ஆய்வு நடவடிக்கைக்கும் இடைக்கால தடை விதித்து 16.01.2024 ஆம் உத்தரவிட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தடை நாட்டில் ஏற்படும் விபரீத விளைவுகளை தடுத்து, நல்லிணக்கம் பேணும் சக்திகளுக்கு ஊக்கம் தருவதாக அமைந்துள்ளது என்பதால் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு உச்ச நீதிமன்றத்தின் தடை உத்தரவை வரவேற்பதுடன், 1991 ஆம் ஆண்டு வழிபாட்டு இடங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தை பயன்படுத்தி 1947 ஆகஸ்ட் 15 ஆம் தேதி வழிபாட்டு இடங்கள் எந்தெந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில் (Status quo) இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இலங்கை கடற்படையின் தொடரும் தாக்குதல் – மீனவர்கள் கைதுக்கு இரா.முத்தரசன் கண்டனம்

இலங்கை கடற்படையின் தொடரும் தாக்குதல் மீனவர்கள் கைதுக்கு கண்டனம் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியுட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் பகுதியில் இருந்து, வங்கக் கடலில் மீன் பிடிக்க சென்ற 12 மீனவர்கள் 14.01.2024 அன்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, காங்கேசன் துறைமுக கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 12 மீனவர்களும் எல்லை தாண்டி நுழைந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். மீனவர்களை கைது செய்த கடற்படையினர், அவர்களிடம் இருந்த மீன்பிடி வலைகளை அறுத்தெறிந்து நாசம் செய்துள்ளனர். படகுகளை அபகரித்து எடுத்துச் சென்றுள்ளனர். அண்மையில் நாகை மாவட்ட மீனவர்கள் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து நடைபெற்ற இந்தச் சம்பவம் மீனவர்களை பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளியுள்ளது.

இலங்கை கடற்படையின் அத்துமீறல்களும், தாக்குதலும் நிறுத்தப்படுவதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டும். இதற்கான முறையில் இலங்கை அரசுடன் ராஜீய முறை அழுத்தம் தந்து தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், தமிழ்நாடு மீனவர்கள் தாக்கப்படுவதும், அவர்களது வலைகளும், படகுகளும் உடைத்து சேதப்படுவதையும் பாஜக ஒன்றிய அரசு மௌன சாட்சியாக வேடிக்கை பார்த்து வருகிறது. மீனவர் நலனை பாதுகாக்காத பாஜக ஒன்றிய அரசின் அலட்சியப் போக்கை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், மீனவர்களை விடுவித்து அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அன்னூர் என்.ஏ.பழனிசாமி மறைவுக்கு இரங்கல்

அன்னூர் என்.ஏ.பழனிசாமி மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

கோவை மாவட்டம் அன்னூர் ஒன்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் என்.ஏ.பழனிசாமி காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

அன்னூர் அருகில் உள்ள நல்லி செட்டிபாளையத்தில் விவசாயத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்த என்.ஏ.பழனிசாமி இளம் வயதில் இளைஞர் பெருமன்றத்தில் சேர்ந்து இடதுசாரி அரசியல் வழியை தேர்வு செய்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயல்பட்டு வந்தவர்.

சாதிய ஆதிக்கத்துக்கு எதிராக பாதிக்கப்படும் மக்களை திரட்டி போராடுவதில் சமரசம் காணாதவர். இவரது மறைவு எளிதில் ஈடு செய்ய முடியாத இழப்பாகும் .

காலமான என்.ஏ.பழனிசாமிக்கு ஜெயந்தி என்கிற மனைவியும், மகன் கோகுல், மகள் வழக்கறிஞர் ஹேமலதா ஆகியோர் இருக்கின்றனர்.

அன்னார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவரது மனைவி மற்றும் குழந்தைகளுக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இயேசுவின் மாதிரி!

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வ கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் திரு சின்னதுரை அவர்களின் நேர்மை பரவலாக பேசப்பட்டது. அவரை நேரிலு சந்திக்க பாதிரியார்குழு சென்றது. எம்.எல்.ஏ.வின் மனைவி இன்னும் 100 நாள் வேலைக்கு போகிறார், இன்று மதிய உணவு நேரத்தில் அவரை காணச் சென்றோம், அவர் 30 ரூபாய் பொட்டல சாப்பாடு வாங்கி சாப்பிட்டு கொண்டு இருந்தார்.

அரசியலில் இன்னும் இப்படிப்பட்டவர்கள் இருப்பது ஆச்சரியம் ஆகவே அவரை நேரில் சந்தித்து வாழ்த்துவது நல்லது என்று கந்தர்வ கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நாங்கள் 8 பேர் நேரில் சென்று வாழ்த்தினோம்.

கிறிஸ்தவ ஊழியர்களே இயேசுவின் மாதிரியை கம்யூனிஸ்ட் எம்எல்ஏ பின்பற்றுகிறார், நீங்கள் எப்படி?

### அரசின் விருது பெற்ற

# பெ.சண்முகம், சுபவீ உள்ளிட்ட – செயல்பாட்டாளர்களுக்கு வாழ்த்துக்கள்

**இரா.முத்தரசன் அறிக்கை**





அரசின் விருது பெற்ற பெ.சண்முகம், சுபவீ உள்ளிட்ட – செயல்பாட்டாளர்களுக்கு வாழ்த்துக்கள் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

பொதுவாழ்வில் உள்ள அரசியல், கலை, இலக்கியத்துறையில் சமூக செயல்பாட்டாளர்களுக்கு தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் மறைந்த தலைவர்களின் பெயரில் விருது வழங்கி, அவர்களை இளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்வதுடன், பொதுவாழ்வில் உள்ளவர்களை பாராட்டி கவுரவித்து ஊக்கப்படுத்தி வருகிறது.

இதன்படி, நடப்பாண்டில் (2023) இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்) மத்திய கமிட்டி உறுப்பினர் பெ.சண்முகம், டாக்டர் அம்பேத்கர் விருதுக்கும், திராவிட இயக்கத் தமிழர் பேரவை நிறுவனர் சுப.வீரபாண்டியன், தந்தை பெரியார் விருதுக்கும் கவிஞர் பழநி பாரதி, மகாகவி பாரதியார் விருதுக்கும், தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன. இவர்களுடன் பாவேந்தன் பாரதிதாசன், அய்யன் திருவள்ளுவர், பெருந்தலைவர் காமராஜர், திரு.வி.க. பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோர் பெயர்களில் உள்ள விருது பெறுவர்களும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு முதலமைச்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றிய, மலைவாழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் உறுதி காட்டி செயல்பட்டவர். கல்லூரி பயின்ற காலத்தில் இருந்து இடதுசாரி அரசியல் களத்தில் முழு நேர ஊழியராக செயல்பட்டு வருப்பவர் பெ.சண்முகம்.

இதேபோல் திராவிட இயக்க குடும்பத்தில் இரண்டாம் தலைமுறையாக பகுத்தறிவு கொள்கை பிடிப்போடு, திராவிடர் தமிழ் தேசிய சிந்தனையாளரான பேராசிரியர் சுப.வீரபாண்டியன், மதவாத, சனாதானக் கருத்துக்களுக்கு எதிராக சமரசம் காணாத, கருத்துப் போராட்டத்தில் முன் நிற்பவர். இவர்களுடன் விருது பெற்ற அனைவரும் சிறப்பாக பொது வாழ்வு மேற்கொண்டு வருபவர்கள். அரசின் விருது பெற்ற அனைவருக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன், பொருத்தமானவர்களை விருதுக்கு தேர்வு செய்து ஊக்கப்படுத்தும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கையை குறிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன் முயற்சிகளை பாராட்டி வரவேற்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சட்டமன்ற உறுப்பினர் மகன் குடும்பத்தால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்குக!

**மாதர் சம்மேளனம் வலியுறுத்தல்!**

சட்டமன்ற உறுப்பினர் மகன் குடும்பத்தால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்க இந்திய மாதர் தேசிய சம்மேளன மாநில செயலாளர் மு.கண்ணகி வலியுறுத்தல். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

சென்னை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி அவர்களின் மகன் ஆண்டோ வீடு திருவாண்மியூரில் உள்ளது. அவ்வீட்டிற்கு வீட்டு வேலை செய்வதற்காக கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகில் உள்ள குக்கிராமத்தை சேர்ந்த பட்டியலின சிறுமியை அவரின் பெற்றோரிடம் உங்கள் மகளை மேற்படிப்பு படிக்க வைப்பதாக ஆசை வார்த்தை கூறி எம்.எல்.ஏ வின் மகனும் மருமகளும் கடந்த ஏப்ரல் மாதம் அழைத்துச் சென்றுள்ளனர்.

ஆண்டோவின் மனைவி மெர்லின் அந்த சிறுமிக்கு சூடு போடுவது, கண்மூடித்தனமாக தாக்குவது, நிர்வாணப்படுத்துவது, சாதிரீதியாக இழிவாக பேசுவது, பொருளாதாரரீதியாக எதுவும் இல்லாதவள் தானேஎன்று இழிவுபடுத்துவது போன்ற மிகக் கொடூரமான சித்தரவதைகள் செய்த காட்சிகள் சமூக ஊடகங்களில் வைரலாக பரவி வருகிறது.

பாதிக்கப்பட்ட பெண்ணின் உடலில் ஏற்பட்ட காயங்கள் அதிர்ச்சியாக உள்ளது. இந்த கொடூரமான செயலில் ஈடுபட்ட ஆண்டோ மற்றும் மெர்லின் மீது எஸ்சி, எஸ்டி வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் நடவடிக்கை எடுக்க இந்திய மாதர் சம்மேளனம் வலியுத்துவதோடு, பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்திற்கு உரிய நிவாரணத்தையும் வழங்கவும், அச்சிறுமியின் மேற்படிப்புக்கான செலவை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தமிழ் நாடு மாநிலக்குழு கேட்டுக் கொள்கிறது.

# தஞ்சாவூர் ஆர்.பொன்னுசாமி மறைவுக்கு இரா.முத்தரசன் இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கை:

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்ட முன்னோடிகளில் ஒருவரும், மூத்த உறுப்பினருமான ஆர்.பொன்னுசாமி (89) 18.01.2024 அன்று தஞ்சாவூரில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு வேதனையுற்றோம். விவசாயக் குடும்பத்தில் 1935 ஜுன் 12 ஆம் தேதி பிறந்த ஆர்.பொன்னுசாமி, இளம் வயதில் கரூர் வைசிய வங்கிப் பணியில் சேர்ந்து பணிபுரிந்தார். அந்த காலகட்டத்தில் வங்கி ஊழியர் சங்கத்தில் இணைந்து ஊழியர் நலனுக்கான போராட்டத்தில் முன்நின்று செயல்பட்டவர்.

பணி ஓய்வு பெற்ற பிறகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சாவூர் மாவட்ட பொருளாளர் பொறுப்பில் நீண்ட காலம் மிகச் சிறப்பாக பணியாற்றினார்.

தேர்ந்தெடுத்த அரசியல் வழியில், கடைசி மூச்சு இருந்த வரை உறுதியாக பயணித்தவர். தொழிற்சங்க போராட்டங்களிலும், கட்சி நடத்திய இயக்கங்களிலும் தவறாது பங்கேற்று முன்மாதிரியாக திகழ்ந்தவர். பொறுப்புணர்வு கொண்ட நல்ல ஊழியரை கட்சி இழந்து விட்டது.

காலமான ஆர்.பொன்னுசாமி அவர்களுக்கு, ஆர்.பி.லெனின், ஆர்.பி.சந்தான கிருஷ்ணன் என இரு மகன்கள் இருக்கின்றனர். தோழர் ஆர்.பொன்னுசாமி மறைவுக்கு, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



எம்.ரவி

## மாமேதை லெனின் அவர்களின் 100ஆம் ஆண்டு

# லெனினும் லெனினியமும்

2

**உலகில் ஏகாதிபத்திய முதலாளித்துவம் உருவாகி உலக செல்வ வளங்களை கொள்ளையடிக்கும் புதிய வரலாற்று சூழலில் மார்க்சியத்திற்கும், பாட்டாளி வர்ககப் போராட்டத்திற்கும் சிக்கல் ஏற்பட்ட இக்கட்டான சூழலில் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தை எதிர்கொண்ட, மார்க்சியத்தின் தூய்மையைப் பாதுகாத்த மாமேதை லெனின் யார்? எவ்வாறு பாதுகாத்தார் என்பதை அவரது நினைவு நூற்றாண்டில் நினைவு கூறுவோம்.**

மன்னராட்சி நடந்து கொண்டிருந்த, பழம்பெரும் நாடான ருஷ்யாவில் சிம்பிர்க்ஸ் என்ற ஊரில் 1870 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் தேதி விளா திமிர் இல்யிச் உல்யானோவ் என்பவர் பிறந்தார். அவருடைய தாயார் மரியா அலெக்சாந்திரொவ்னா பிளாங். தந்தையார் இலியா நிக்கொலாயெவிச் உல்யானோவ். தாயார் ஒரு மருத்துவரின் மகள்.

தந்தையார் ஒரு கல்வி அதிகாரி. அண்ணன் அலெக்சாந்தர், தம்பி டிமிட்ரி, அக்கா ஆனா, தங்கைகள் மரியா, ஆல்கா. படித்த ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் விளாதிமிர் இல்யிச் உல்யோனாவ் என்கிற வி.இ.லெனின்.

“சூழல்களால் உருவாக்கப்படுபவன் மனிதன்” “சூழல்களை உருவாக்குபவன் மாமனிதன்”

என்று சொல்கிறார்கள். அவ்வாறு சூழல்களால் உருவாகி, சூழல்களை உருவாக்கிய மாமேதை லெனின்.

விளாதினர் இல்யிச் பிறந்து வளர்ந்த தருணத்தில் ருஷ்யாவில் ஜார் மன்னர்களின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஜார் ஆட்சிக்கு எதிராக பல தரப்பினர் பலவகையான போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தனர். கல்வி அதிகாரியாக இருந்த விளாதிமிர் இல்யிச்சின் தந்தை முற்போக்காளராக இருந்த காரணத்தால் ஜார் ஆட்சியில் பழிவாங்கப்பட்டார். 1886 ஆம் ஆண்டு மரணமடைந்துவிட்டார். ஜார் ஆட்சிக்கு எதிராக கலகம் செய்த அவரது அண்ணன், ஜார் அரசு தூக்கிலிட்டுக் கொன்றது.

இவ்வாறு விளாதிமிர் இல்யிச் 17 வயது மாணவனாக இருந்தபோது தந்தை இறப்பு, அண்ணன் மறைவு, அக்கா சிறையில் என்ற கொடுமை நிகழ்ந்தது. அது மட்டுமல்ல உற்றார், உறவினர், சுற்றம் அனைத்தும் விளாதிமிர் இல்யிச் குடும்பத்தை குற்றவாளியின் குடும்பம் என ஒதுக்கிவிட்டன.

1891 ஆம் ஆண்டு தனது பாசமிகு தங்கை ஆல்காவும் உடல்நலமின்றி இறந்துவிட்டார். விளாதிமிர் இலியச் மிகுந்த மனவேதனையுடன் தனது தாயோடும் மற்ற தங்கை, தம்பியுடன் கடும் சோதனையான வாழ்க்கை வாழ்ந்தார்.

சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்புகள், சோகம் ஒருபுறம், நாட்டில் நிலவி வந்த கொந்தளிப்பான சூழல் ஒருபுறம், விளாதிமிர் இல்யிச்சை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியது. விடாமுயற்சியுடன் தனது 21 வது வயதில் சட்டம் பயின்று வழக்கறிஞரானார். இதே வேளையில் மார்க்சிய தத்துவத்தை பல ஆண்டுகள் ஆழ்ந்து படித்து புரிந்து மாக்சியவாதியாகவும் உருவானார்.

காரல் மார்க்ஸ் மரணமடைந்தபோது பிரடெரிக் ஏங்கெல்ஸ் அவர்கள் கூறிய செய்தி:

“மார்க்ஸ் தான் சிந்திப்பதை நிறுத்திவிட்டார், மார்சின் இதயம் துடிப்பதை நிறுத்திவிட்டது. அவரது மூளையின் இயக்கம் நின்று போனது, அவரது பூதவுடல் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டுவிட்டது.

ஆனால், “அவரது மூளையின் ஆற்றல் அந்தக் கல்லறைக்குள் அடங்கிவிடவில்லை. அது இயங்குகிற மூளைகளையெல்லாம் இயக்குகிறது. உலகில் மாபெரும் செயல்களுக்கு அந்த மூளையின் ஆற்றல் உந்துவிசையாக உருவாகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் ஏன் மனிதகுலத்தின் பொதுச் சொத்தாகி, மனித குலத்தின் இலட்சியமாகி புரட்சிக்கு வேராக அவரது மூளையின் ஆற்றல் பரவி நிற்கிறது” என்று ஏங்கல்ஸ் சொன்னார்.

அவர் கூறியதைப்போல் மார்க்சின் மூளையின் ஆற்றல் லெனினின் இயங்குகிற மூளையை இயக்கியது. மார்க்சிய போதனை லெனினின் சிந்தனைக்கு வழிகாட்டியது.

லெனினின் சிந்தனையில் புதிய கருத்துக்கள் உதித்தன “ஆட்சி அதிகாரத்தை மட்டும் கைப்பற்றி அரசாட்சி செய்வதல்ல புரட்சி. புரட்சி



என்பது அரசியலில், பொருளாதாரத்தில், சமூகத்தில், பண்பாட்டில் என அனைத்து துறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தி மனித சமூகம் புதிய முறையில் வாழ்வதற்கான வழிமுறைகளை செயல்படுத்தி வாழ்வதுதான் புரட்சி” என்கிற ஞானத்தை தனது 21 வது வயதில் பெற்றார் விளாதீர் இல்யிச் உல்யானோவ்.

தனிமனிதர்கள் சிலர் மட்டும் புரட்சிவாதியாக இருந்தால் மட்டும் போதாது வெகுமக்களை புரட்சிக்காரர்களாக மாற்றுவதுதான் முக்கியமானது என்பதை மார்க்சிய வழியில் சிந்தித்து தெளிந்த விளா திமிர் இல்யிச் உல்யானோவ் மாமேதை லெனினாக உயர்ந்தார்.

காரல் மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கெல்ஸ் ஆகியோரின் மறைவுக்கு பின்னர் உலக சூழலும், சமூக நிலைமைகளும் மாற்றங்களடைந்தன. முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஏகாதிபத்திய முதலாளித்துவமாக உருவெடுத்தது. இந்த ஏகாதிபத்தியக் கட்டத்தில் சமூக நிலையில் புதிய புதிய பிரச்சனைகள் முளைத்தன, வளர்ந்தன. இந்த பிரச்சனைகளை மார்க்சிய வழியில் நின்று பகுப்பாய்ந்து தீர்வு காண புதிய புதிய அம்சங்களை மாமேதை லெனின் கண்டுபிடித்து வளர்த்தெடுத்தார்.

ஏகபோக முதலாளித்துவ கட்டத்தில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியானது எத்தகைய புதிய உறவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், இந்த புதிய சூழலில் வர்க்க போராட்டத்தின் இயல்புகள் எப்படி உள்ளது என்பதையும் வலியுறுத்தி மார்க்சியத்தை லெனின் மேம்படுத்தினார்.

தத்துவ துறையில் பொருள்முதல்வாதக் கருத்துக்களை திசைதிருப்ப “அறிவியல் கருத்து முதல்வாதம்” முதலாளித்துவ அறிஞர்களால் முன்வைக்கப்பட்டது. அதனை, “புரட்சிகர பொருள் முதல்வாதத்தை” முன்வைத்து லெனின் முறியடித்தார்.

மார்க்சிய இயக்கவியலை அறிவியல் யுகத்துக்கான தத்துவமாக மாமேதை லெனின் வளர்த்தெடுத்தார்.

அரசியல் பொருளாதாரதுறையில், ஏகாதிபத்திய முதலாளித்துவம் எப்படி ஏற்பட்டது? எதனால் ஏற்பட்டது? அது இந்த உலக சமூகத்தை என்ன செய்யும்? அதன் கேடுகளை எப்படி வீழ்த்துவது? என்பதை பகுத்தாய்ந்த மாமேதை லெனின் ஏகாதிபத்தியம் என்பது “முதலாளித்துவத்தின் உச்சகட்டம்” என்பதை உலகுக்கு விளக்கினார்.

அரசியல்துறையில், சோசலிசப் புரட்சியின் சகாப்தத்தை லெனின் துவக்கினார். மேலும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முறியடிக்க, வீழ்த்த உலகத் தொழிலாளர்கள் மட்டும் ஒன்று சேர்ந்தால் போதாது. அடிமைப்பட்ட ஒடுக்கப்பட்ட அனைத்து வகையான மக்களும் ஒன்றுசேர வேண்டும்! என்பதை உணர்த்தி லெனின் உலகில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை உருவாக்கினார்.

அடிமைப்பட்டுகிடந்த காலனிய நாடுகளின் விடுதலைக்கான அரசியல் என்பது மார்க்சிய வெளிச்சத்தில் நடைபெற வழிகாட்டினார் லெனின். இதனால், உலகம் முழுவதும், பல நாடுகளில் புதிய வகைப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றின.

ஏகாதிபத்திய காலகட்டத்தில் புரட்சிகரமான மார்க்சியத்தை, அதன் செயல்படுத்தும் ஆற்றலை மாமேதை லெனின் கண்டறிந்து வளர்த்தெடுத்தார். அதுதான் லெனினியமாகும்.

தொடர்புக்கு: 9442736668

# விவசாய சங்க மாவட்ட மாநாட்டை விளக்கி இருசக்கர வாகன பிரச்சாரம்!



விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு நடைபெறுகிறது. இம்மாநாட்டை விளக்கி 3 மையங்களிலிருந்து 2நாள் இருசக்கர பிரச்சார இயக்கம் நடைபற்றது.

வத்திராயிருப்பிலிருந்து தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன் தலைமையில், சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தொடங்கி வைத்தார். வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ , வட்ட செயலாளர் கோவிந்தன் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

இராஜபாளையம் சொக்கநாதன் புத்தூரிலிருந்து தவிச அய்யணன் தலைமையில் சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தொடங்கி வைத்தார். மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாநிலகுழு உறுப்பினர் பாலமுருகன், வட்ட செயலாளர்கள் கணேசமூர்த்தி, ராமச்சந்திரன் ,நடராஜன் , நகர செயலாளர்கள் விஜயன், மூர்த்தி, ஏஐடியுசி சமுத்திரம், வழக்கறிஞர்கள் பகத்சிங் உள்பட பலர் கலந்து கொண்டார்கள். திருச்சுழி வட்டத்தில் செந்தூர்பாண்டி தலைமையில் வட்ட செயலாளர்கள் செல்வம், வேலுச்சாமி, முனியசாமி உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# ஆர்.என்.ரவியின் வம்பு வளர்க்கும் போக்குக்கு இரா.முத்தரசன் கண்டனம்

ஆர்.என்.ரவியின் வம்பு வளர்க்கும் போக்குக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில், வள்ளுவர் படத்திற்கு காவி உடை போட்டு, திருநீறு பூச்சு பூசி அச்சிட்டுள்ளதுடன் “பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி” என குறிப்பிட்டிருப்பது வம்புக்கு இழுக்கும் அடவாடித்தனமாகும்.

அய்யன் வள்ளுவர் படைப்பில் உள்ள 1330 குறட்பாக்களில் ஒன்றுகூட எந்த மதம் சார்ந்தும் பேசுவதில்லை. ஆனால், “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என பிறப்பில் சமத்துவம் நிலவுவதை உணர்த்துகிறது. மேலும், “ஒழுக்கமும், வாய்மையும் நானும் இம் மூன்றும் இழுக்கார் குடி பிறந்தார்” மற்றும் “நகை ஈகை, இன்சொல் இகழாமை நான்கும் வகையென்ப வாய்மைக் குடிக்கு“ ஆகிய குறள்கள் வழி “வெறுப்பு அரசியலை” ஒதுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, உலகப் பொதுமறை தந்த தமிழ் சமூகத்தின் தொன்மை சிறப்பு வாய்ந்த புலவரை, சனாதனத் துறவி என இழிவுபடுத்துவது பகுத்தறிவாளர்களையும், மனித நேயம், நல்லிணக்கம் பேணி வருவோரையும் வம்புக்கு இழுத்து, கலகம் செய்யும் நோக்கம் கொண்டது. ஆளுநர் பொறுப்பில் இருந்து கொண்டு ஆர்.என்.ரவி இதுபோன்ற மலிவான செயலில் ஈடுபடுவதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அருந்ததியர் நிலத்தை அபகரிப்பதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

அருந்ததியர் நிலத்தை பறிக்கும் பி.ஜே.பி. மாவட்ட இலக்கிய பிரிவை சார்ந்த குணசேகரன் என்பவரைக் கண்டித்து இராமநாயக்கன்பாளையம் ஊராட்சியை சேர்ந்த சி.கண்ணையன், சி.கிருஷ்ணன் ஆகிய சாதாரண விவசாயிகள் மீது அமலாக்க துறையை ஏவி நிலத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட குழு சார்பில் ஆத்தூர் மணிக்கூண்டு அருகில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில துணைச்செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நா.பெரியசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன், பொருளாளர் டி.கண்ணன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் என்.எம்.சடையன், பி.பரமசிவம், டி.வி.கருணைதாஸ், எம்.முனுசாமி, என்.கே.செல்வராஜ், எஸ்.பாலன், எஸ்.தனக்கோட்டி உள்ளிட்ட திரளான தோழர்கள் பங்கேற்றனர். வட்டச் செயலாளர் எஸ்.கவிதா செல்லப்பன் நன்றி கூறினார்.

வெள்ளத்தால் குடியிருப்பை இழந்த குடும்பங்களுக்கு

# வங்கி ஊழியர்கள் நிவாரணம் வழங்கினர்!



தூத்துக்குடியில் பெய்த கனமழை காரணமாக மாப்பிள்ளையூரணி ஊராட்சிக்குட்பட்ட ராஜபாளையம் பகுதியில், வெள்ள சேதம் ஏற்பட்டு பலர் குடியிருப்பை விட்டு வெளியேறினர். நான்கு வாரங்களுக்கு மேலாகியும் வீட்டில் புகுந்த மழைநீர் வடியாமல், மீண்டும் குடியமர முடியாமல் பல குடும்பங்கள் தத்தளித்து கொண்டிருக்கிறார்கள்.

அக்குடும்பங்களுக்கு உதவ புரிய விஜயா வங்கி ஒய்வு பெற்ற ஊழியர்கள் அப்பகுதிக்கு நேரில் சென்று அக்குடும்பத்தினர்களுக்கு நிவாரண பொருட்களுடன், நிவாரண தொகையையும் வழங்கினார்கள். எஸ்.நாராயணன் ஜி.நாராயணன்.எஸ்.எம்.ஜி.இளங்கோ மந்திரம் ஆகியோருடன் நகர வங்கி ஊழியர் சங்க செயலாளர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வழங்கினார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தாளமுத்துநகர் கிளை செயலாளர்.மி.அந்தோணிசௌந்தராஜன் கட்சியின் மாவட்ட பொருளாளர்.த.சுப்பிரமணியன் கட்சியின் வழக்கறிஞர். பெ.கணபதி, சுப்பிரமணியன் ஆகியோர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க உதவி செய்தார்கள்.

மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில்

# சுடுகாடு கேட்டு போராட்டம்!

தென்காசி மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் இறந்தவர்களை புதைக்க இடம், குடிநீர் வசதி, தெருவிளக்குகள், சாலை வசதி, கழிவறைகள், மக்களின் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தராத ஊராட்சி ஒன்றியத்தை கண்டித்து கிளைசெயலாளர் ஆர். ராமலெட்சுமி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம்

மாவட்ட செயலாளர் டி. இசக்கித்துரை, ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் எஸ். சுப்பையா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆர்.சமுத்திரக்கனி, ஜெ.அந்தோணிராஜ், மாவட்ட குழு எம்.முருகன், எஸ். கணேசன், ஏ.பழனிமுருகன் மற்றும் தாலுகா செயலாளர் ஏ. கனகராஜ், துணை செயலாளர் ஆர்.மனுவேல்ரா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வினாடி - வினா விடைகள்

1. காரல் மார்க்ஸ், பிரெட்ரிக் ஏங்கெல்ஸ்
2. பிரெட்ரிக் ஏங்கெல்ஸ்
3. நவம்பர் 26
4. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
5. ஏழு உரிமைகள்
6. ராபர்ட் புரூஸ் ஃபுட்

# போக்குவரத்து தொழிலாளர் பிரச்சினையில் உரிய தீர்வு காண்க!

**பேச்சுவார்த்தையில் ஏஐடியுசி வலியுறுத்தல்!**

அரசு போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் தொழிலாளர்கள், மற்றும் 92 ஆயிரம் ஓய்வூதியர்கள் சம்பந்தமாக 6 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து ஏஐடியுசி, *HMS, CITU, INTUC, MLF, TTSF DWU* சார்பாக வேலைநிறுத்த அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

தொழிலாளர் துறை தனி இணை ஆணையர் சென்னை அவர்களுடன் மூன்று கட்ட பேச்சு வார்த்தையும், அமைச்சர் முன்பு ஒரு முறை பேச்சு வார்த்தையும் நடைபெற்றுள்ளது. கோரிக்கைகள் மீது எவ்வித தீர்வும் ஏற்படாத நிலையில் 09.01. 24 முதல் வேலை நிறுத்தம் நடைபெற்றுள்ளது. வேலை நிறுத்தத்தை கைவிட வலியுறுத்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கின் மீது விசாரணை நடைபெற்றது. அதில் வேலை நிறுத்தத்தை தொழிற்சங்கங்கள் கைவிடுமாறும், தொழிற்சங்கங்களின் கோரிக்கையின் மீது 19.01. 24 ல் தொழிலாளர் துறை தனி இணை ஆணையர் முன்பு நடைபெற உள்ள பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுமாறும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மீது பழிவாங்குதல் நடவடிக்கை இருக்கக் கூடாது எனவும் தீர்ப்பளித்து வழக்கை முடித்து வைக்கப்பட்டது.

அதனை ஒட்டி நடைபெற்ற பேச்சு வார்த்தையில் மாநகர் போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர், அரசு விரைவு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் இதர போக்குவரத்து கழகங்களில் இருந்து இரண்டாம் கட்ட நிலையிலுள்ள அலுவலர்கள் கலந்து கொண்டனர். ஏ ஐ டி யு சி, சி ஐ டி யு, ஐ என் டி யு சி, *HMS* உள்ளிட்ட 27 தொழிற்சங்கங்கள் அழைக்கப்பட்டிருந்தன. இதில் ஏ.ஐ.டி.யு.சி. சார்பில் பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம், துணைப் பொதுச் செயலாளர் கே.எம். செல்வராஜ், எம்.நாராயணசிங் ஆகியோர் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நாட்களுக்கு வேலையில்லை சம்பளம் இல்லை (No work, No pay)எனவும், பழிவாங்குதல் நடவடிக்கை எதுவும் இருக்காது, அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நிர்வாக உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால் அதற்குரிய தீர்வு காணப்படும். போக்குவரத்து கழகங்களில் ஏற்படும் வரவு செலவு வித்தியாசத்தொகை அரசு நிதி ஒதுக்குவது, அரசுடன் கலந்து பேசிநடவடிக்கை எடுக்கப்படும், காலி பணி யிடங்கள் பூர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, வாரிசு பணி நியமன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வாரிசு பணி நியமனம் செய்யப்பட்ட ஓட்டுனர் நடத்துனர்களுக்கு ரூ 436,429 எனவும், தற்காலிக பணி நியமனம் செய்த ஓட்டுனர் நடத்துனர்களுக்கு ரூ690,700 எனவும் வழங்கப்பட்டு வருகிறது. குறைந்தபட்ச ஊதியம் கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும் என தொழிலாளர் தனி இணை ஆணையர் அறிவுரை வழங்கினார்.ஓய்வூதியர் அகவிலைப் படி உயர்வு பிப்ரவரி மாதம் ஆறாம் தேதி உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கின் இறுதித் தீர்ப்பை பொறுத்து முடிவெடுக்கப்படும்.

சமூக விரோதிகளால் ஓட்டுனர் நடத்துனர் தாக்கப்படும் சம்பவம் தொடர்கதையாகி வருகிறது. அரசு,போக்குவரத்து நிர்வாகம் காவல்துறை உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்றுப் பணியும், சிகிச்சை பெறும் காலம், மற்றும் வேலைக்கு தகுதியாகி பணி ஒப்புக்கொள்ளும் வரை சம்பளத்துடன் கூடிய விடுமுறையும் வழங்கிட வேண்டும்.அடுத்த கட்ட பேச்சு வார்த்தை பிப்ரவரி மாதம் 7ம் தேதி நடைபெறும்.

# ஆடிட்டர் சி.என்.ஜெயச்சந்திரன் மறைவுக்கு இந்தியக கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

ஆடிட்டர் சி.என்.ஜெயச்சந்திரன் மறைவுக்கு இந்திய்க் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப கால முன்னோடியும், தலைசிறந்த மூத்த தணிக்கையாளருமான சி.என். ஜெயச்சந்திரன் (92) 19.01.2024 அன்று பெங்களூரில் உள்ள அவரது மகன் வீட்டில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



தோழர் : ஜெயச்சந்திரன். (92)

ஆடிட்டர் சி,என்.ஜெயச்சந்திரன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப கால முன்னோடிகளில் ஒருவர். மோகன் குமாரமங்கலம், கே.பாலதண்டாயுதம், ப. மாணிக்கம், வழக்கறிஞர் என்.டி. வானமாமலை போன்றோருடன் இணைந்து பணியாற்றியவர்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிக்கும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் மற்றும் அதன் இணைப்பு அமைப்புகளின் நீண்ட கால தணிக்கையாளராக மிக சிறப்பாக பணியாற்றியவர். இளம் தணிக்கையாளர்களை உருவாக்கியதில் குறிப்பிடத்தக்கவர். அவரது மறைவு பெரும் வேதனையளிக்கிறது.

அன்னார் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தணிக்கையாளர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஆடிட்டர் ஜெயசந்திரன் உடலுக்கு தலைவர்கள் அஞ்சலி!

இந்தியகம்யூனிஸ்ட்கட்சியின் தொடக்க கால முன்னோடியும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் தணிக்கையாளருமான ஆடிட்டர் ஜெயச்சந்திரன் காலமானார்.

அம்பத்தூரில் 20. 1. 2024 அன்று நடைபெற்றஅவரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் உள்ளிட்ட தோழர்கள் மலரஞ் சலி செலுத்தினர்.



அவரது இல்லத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் பேசிய இரா. முத்தரசன், ஜெயச்சந்திரன் நல்ல தோழர் மட்டும் அல்ல, கட்சி மற்றும் நமது நிறுவனங்களுக்கும் மிகுந்த நம்பகமான நம்பிக்கையாக செயல்பட்டவர். அவரது சொல்லிலும், செயலிலும் நேர்மை தான் இருக்கும். என புகழாரம் சூட்டினார்.

திராவிடர் கழகத்தின் மாநில பொருளாளர் குமரேசன், கட்சியின் மாநில துணைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா. பெரியசாமி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குனர் க. சந்தானம், ஆடிட்டர் ஜான் மோரிஸ், ஆடிட்டர் மகேஸ்வரி, தோழர் ப. மாணிக்கம் அவர்களின் மகள் மகேஸ்வரி ஆகியோர் புகழுஞ்சலி உரையாற்றினார்கள்.

கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, மாநிலக் குழு உறுப்பினர் எஸ். ஏழுமலை, அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா விஜயகுமார், எம்.ஆர்.ரகுநாதன், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் அகில இந்திய செயலாளர் சீ. தினேஷ், ஏ ஐ டி யு சி மாநில நிர்வாக குழு உறுப்பினர் இரா. துரைசாமி மற்றும் திரளான தோழர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

# தமிழகமெங்கும் பொங்கல் விழாக்கள்


பனைபொங்கல்



தை பொங்கல் திருநாளைமுன்னிட்டு உலகதமிழர்கள் வரலாற்றில் முதல்முறையாக "பனைபொங்கல் விழா" பனைஇளவரசி' கவிதாகாந்தி தலைமையில், ஆவடி அன்னூர் வேம்புலி அம்மன் கோயிலில் உள்ள பனைமரத்துக்கு பனைபொங்கல் வைக்கப்பட்டது.

தமிழகர்களின் வாழ்வில் கற்பகத் தருவாக விளங்கியது பனைமரம். வேர்முதல் நுனிவரை பயன்தரக்கூடியது. 1500 வகையான பயன்களையும் மற்றும் அனைத்து நோய்களையும் குணமாக்ககூடிய கர்ப்பக விருச்சகம் பனை மரங்கள். தமிழகமெங்கும் பனை மரங்களை பாதுகாக்க வேண்டும், பனைதொழிலாளர்கள் வாழ்க்கை உயர்வுபெறவேண்டும் என்பதற்காக" பனைபொங்கல் விழா நடைபெற்றது.

விழாவுக்கு சமூக ஆர்வலர் சபீர் அகமது வரவேற்பு உரை ஆற்றினார். ஆவடி நகர ஐஜேகே தலைவர் ஆர் சுரேஷ், கே ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உழைப்பாளர் தமிழ் தன்னுரிமை இயக்கம் தலைவர் மு. ராமச்சந்திரன், புழலேரி பாதுகாப்பு மக்கள் இயக்க பொதுச் செயலாளர் கா. மனோகரன், கள் குடிப்போர் இயக்க தலைவர் செல்ல பாண்டியன், ஐ என் டி யு சி மாநிலத் தலைவர் விநாயகம், கொரட்டூர் ஏரி பாதுகாப்பு இயக்கம் மானிட மணம் சேகர், மூத்த பத்திரிக்கையாளர் சேகுவாரா ஜெய்சங்கர் முனைவர் அயன்புரம் பாபு உள்ளிட்டோர் பங்கேற்றனர். தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்பின் மாநில தலைவரும், ஜனசக்தி பொது மேலாளருமான இளசை கணேசன் பனை மரங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். எம் எஸ் ஆறுமுகம் நன்றி கூறினார்.

***கள்ளக்குறிச்சி:*** பொங்கல் திருநாள் விளையாட்டு விழா பரிசளிப்பு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் இணைந்து திருநாவலூர் கிராமத்தில் மேளதாளங்களுடன் நடைபெற்றது. முதலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட பொருளாளர் எம் வெங்கடேசன் தலைமையில் சமத்துவ பொங்கல் வைக்கப்பட்டது.

திருநாவலூர் ஒன்றிய பெருந்தலைவர் சாந்தி இளங்கோவன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பரிசுகள், புத்தகங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். நிகழ்ச்சியில் ஒன்றிய பொருளாளர் கே மணிகண்டன், வட்ட தலைவர் கே ஆறுமுகம், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சுவாதி முருகன், ஒடுக்கப்பட்ட வாழ்வுரிமை இயக்கம் ஒன்றிய அமைப்பாளர் பாலையா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

***தென்காசி மாவட்டம்:*** உழவர் திருநாளை முன்னிட்டு ஆம்பூரில் செங்கொடி ஏற்கப்பட்டது. இதில் விவசாய சங்க மாவட்ட செயலாளர் வேலாயுதம், நிர்வாக குழு உறுப்பினர் பரமசிவன், சட்டநாதன், மணி, ராமசாமி, சமுத்திரவேலு, முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிவகிரியில் 15 கிளைகளில் செங்கொடியை அந்தந்த கிளைச் செயலாளர்கள் ஏற்றினார்கள். நிர்வாக குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், மாவட்டகுழு உறுப்பினர் கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆயிரப்பேரியில் விவசாய தொழிலாளர்சங்க கிளைச் செயலாளர் கோவிந்தன் செங்கொடி ஏற்றினார். விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட கன்வினர் எம்.எஸ்.கிட்டப்பா சிறப்புரையற்றினார். கிளை செயலாளர் லட்சுமணன், துரைராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இராயகிரியில் மூன்று இடங்களில் செங்கொடி ஏற்றப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் டி.இசக்கித்துரை, நிர்வாக குழு உறுப்பினர் சமுத்திரக்கனி, மற்றும் செரிமுத்து, சின்னவேல்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர். கே. டி. கே. ஆட்டோ சங்க பெயர் பலகை திறக்கப்பட்டது.

வாசு ஒன்றியத்தில் அனைத்து கிளைகளிலும் செங்கொடி ஏற்றப்பட்டது. மாவட்ட ஏஐடியூசி பொதுச்செயலாளர் டி.சுப்பையா, வாசு ஒன்றிய செயலாளர் ப. நகர்மன்ற உறுப்பினர் பாக்கியம்,வேலு மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளின் குறுகிய கால கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்

**விவசாய சங்க மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வலியுறுத்தல்**

மழை, வெள்ள பாதிப்புகளில் நிவாரணம் வழங்குவதில் பாரபட்சம் இல்லாமல் ஒன்றிய அரசு செயல்பட வேண்டும் என விவசாய சங்க மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி தெரி வித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நிலங்களை பார்வையிடும்போது, தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை சற்று கால தாமதமாக துவங்கிய போதிலும், தமிழ்நாடு முழுவதும் பரவலாக நல்ல மழையானது பதிவாகியது. குறிப்பாக சென்னை, நெல்லை, கன்னியாகுமரி, உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும் சேதத்தை விளைவிக்கும் வகையில் மழையானது பதிவானது. இந்நிலையில் டெல்டா மாவட்டங்களில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மூன்று தினங்கள் தொடர்ந்து மழையானது பெய்து. அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர் பெருமளவு தண்ணீர் மூழ்கி பாழானது.

இந்த சூழலில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி, கொள்ளிடம், மாதானம், மயிலாடுதுறை, செம்பனார்கோயில், புங்கனூர், பச்சப்பெருமாநல்லூர், வாழ்ந்திட சமுத்திரம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் மாநில பொதுச் செயலாளர் மாசிலாமணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன், வி.ச.மாவட்ட துணை செயலாளர் கே.எஸ். சிவராமன், கட்சியின் சீர்காழி கொள்ளிடம் ஒன்றிய செயலாளர்கள்.வே.நீதிசோழன், ஜெயசக்திவேல், வி.ச.ஒன்றிய செயலாளர் கே.வரதராஜன், மாவட்ட குழு உறுப்பினர் ஜெயகுமார் ஆகியோர் மழை பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு விவசாயிகளிடம் குறைகளையும் கேட்டறிந்தனர்.

அதனை தொடர்ந்து செய்தியாளிடம் பேசிய பி.எஸ்.மாசிலாமணி கூறியதாவது, காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு வடகிழக்கு பருவமழை கை கொடுக்க வேண்டிய நேரத்தில், மழையானது வேறு எங்கோ பெய்து விட்டு, கடைசியாக அறுவடை செய்யும் நேரத்தில் இங்கு பெய்துள்ளது. இதனால் கடந்த டிசம்பர் மாதம் பெய்த மழையின் போது பெரும் பாதிப்பை சந்தித்தனர். அதிலிருந்து ஓரளவு மீண்ட விவசாயிகள் தற்போது முற்றிலும் அழிவை சந்தித்துள்ளனர். காவிரி டெல்டா கடைமடை பகுதிகளில் உள்ள நான்கு மாவட்டங்களை இந்த மழை புரட்டிப்போட்டு உள்ளது. விவசாய நிலங்கள் பாதிப்பு அரசு கூறியதை காட்டிலும் மயிலாடுதுறை மாவட்டத்தில் அதிகமாக உள்ளது.

விவசாயிகள் ஏக்கருக்கு ரூபாய் 35 ஆயிரம் வரை செலவு செய்து விவசாய பணி மேற்கொண்டுள்ளனர். ஆகையால் நெற்பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 35 .000 ரூபாய் நிவாரணமும், மானாவாரி பயிர்களுக்கு 1 ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கவேண்டும். அதுபோன்று ஆடு, மாடு போன்ற இதர பாதிப்புகளுக்கும் நிவாரணத்தொகையினை உயர்த்தி வழங்க வேண்டும்.

ஜனவரி மாதத்துடன் விவசாயிகளின் குறுகிய கால கடனுக்கான காலக்கெடு முடிகின்றது. இந்த கடனை நிரந்தரமாக தள்ளுபடி செய்யவேண்டும், ஒன்றிய அரசு பாரபட்சம் இல்லாமல் தமிழகத்தை பேரிடர் மாவட்டமாக அறிவித்து, கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் மாசிலாமணி தெரிவித்தார்.

## கரியமால் வீட்டு திருமண விழாவில்
# ஜனசக்தி வளர்ச்சி நிதி



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை இந்திய கம்யூனிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் துணை செயலாளர் கரியமால் . இவரது மகள் க.சுகந்தி – ஜெ.தமிழரசன் திருமணம் பந்தல்குடியில் நடைபெற்றது. தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி. லிங்கம் எக்ஸ் எம்பி, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி , மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், வட்ட செயலாளர் முனியசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். அப்பொழுது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ2000 வழங்கப்பட்டது.

# ஆட்டோ தொழிலாளர்களுக்கு ரூ.6000 ஓய்வூதியம் வழங்குக!

**நாமக்கல் மாவட்ட பேரவை வலியுறுத்தல்!**

நாமக்கல் மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் 27ஆம் ஆண்டு பேரவை கூட்டம் திருச்செங்கோடு நகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாவட்ட தலைவர் ஜெ.சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஏஐடியுசி மாநில செயலாளர் எஸ்.சின்னச்சாமி, ஏஐடியுசி ஆட்டோ சம்மேளன மாநிலச் செயலாளர் பி.மாரியப்பன் ஆகியோர் ஆட்டோ தொழிலாளர்களின் வாழ்வாதாரம் குறித்தும், சமூக பாதுகாப்பு குறித்தும், சட்டசலுகைகள் குறித்தும், எதிர்கால கடமைகள் குறித்தும் விளக்கிப் பேசினர்.

ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், வி.தொ.ச மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன், சிபிஐ நகர செயலாளர் எஸ்.சுகுமார், கட்டட சங்க மாவட்ட செயலாளர் ஏ.குமார், ஆட்டோ சங்க பொறுப்பாளர் டி.கே.சுப்பிரமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்

கூட்டத்தில் 60 வயது முடிவடைந்த ஆட்டோ தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.6,000 ஓய்வூதியம் வழங்க வேண்டும், ஆட்டோ தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் தனியார் கம்பெனிகளின் ஓலா, ஊபர், ரேப்பிட்டே போன்ற வாகனங்களை தடை செய்யக்கோரி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# விவசாய தொழிலாளர் சங்க பி.ஆர்.மணி மறைவு!

**தோழர்கள் அஞ்சலி!**

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் வட்டம், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் வட்ட தலைவரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டக் குழு உறுப்பினர் பி.ஆர்.மணி கிருஷ்ணகிரியில் வாகன விபத்தில் இயற்கை எய்தினார். இறுதி நிகழ்ச்சியில் விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் எஸ். கண்ணு, மாவட்ட செயலாளர் ஆர்.சேகர், மாவட்ட துணை தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் ராமமூர்த்தி, பொருளாளர் சக்கரவர்த்தி, விவசாய சங்க மாவட்ட தலைவர் சிவராஜ், கட்சியின் வட்ட செயலாளர் காளியப்பன் உள்ளிட்ட பலர் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

# இந்த வார தம்பிக்குறள்

### 148. இயற்கை அறிவு

**கரையாஅன் புற்றெடுக்கக் கண்டன்றோ கண்டான்**
**அறைபல ஆஅங்காங் காய்.**

கறையான் பலஅறைகள் அடுக்கிய புற்று எழுப்புவதைக் கண்ட மனிதன் பலமாடிக் கட்டிடங்களைக் கட்டக் கற்றுக் கொண்டான்.

**வீட்டில் விளக்கேற்றும் வித்தை விளம்பியதார்**
**கூட்டிலிடும் மின்மினி புக்கு.**

தூக்கணாங்குருவி இரவு வெளிச்சத்திற்காக, மின் மினிப்பூச்சைப்பிடித்துக் களிமண்ணால் கூட்டுக்கள் ஒட்டவைத்துக் கொள்ளுமாம். இதனைக் கண்ட மனிதன் வீட்டில் விளக்கேற்றும் வித்தை கற்றுக் கொண்டான்.

# தமிழகமெங்கும் ஜீவா நினைவு நாள் விழா

**கோவை:** ஜீவாவின் நினைவு நாள் நிகழ்வு கோவை சன்மார்க்க சங்கத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ் வரவேற்புரை நல்கினார். இதில் கவிஞர் கே.ஜீவபாரதி சிறப்புரை ஆற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் துவக்க உரை நிகழ்த்தினார். இந்தியக் க,லாச்சார நட்புறவுக் கழகத்தின் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன் சிறப்புரை நிகழ்த்தினார்.

மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வி.எஸ்.சுந்தரம், கே.எம்.செல்வராஜ், பி.மௌனசாமி, சாந்தி சந்திரன், வி.ஆர். பாண்டியன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா. ரமணி, வழக்கறிஞர் கே.சுப்பரமணியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மதுரை மாநகர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட தெற்கு பகுதி குழு சார்பாக ஜீவா நகரில் பொங்கல் விழா மற்றும் ப.ஜீவானந்தம் நினைவு தினம் நடைபெற்றது.

சிலம்பாட்ட போட்டி, தடகள போட்டி என சிறப்பாக விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு பொருட்கள் வழங்க பட்டன.

இந்த நிகழ்ச்சியில் கட்சியின் தமிழ் மாநில செயற்குழு உறுப்பினர் திருப்பூர் எம்.ரவி, மதுரை மாநகர மாவட்ட செயலாளர் எம்.எஸ். முருகன், புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல், தெற்கு பகுதி செயலாளர் பா.சுமதி, மாதர் சங்க மாவட்ட செயலாளர் பா.ராஜலெட்சுமி, இருட்ட சங்க மாவட்ட செயலாளர் எம். இருளாண்டி, பகுதி செயலாளர் பாலமுருகன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் பழனிமுருகன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்புற நடத்தினார்கள்.

**திருவண்ணாமலை:** திருவண்ணாமலை மாவட்டம் ரெட்டியார் பாளையத்தில், ஏஐடியுசி சுமைதூக்கும் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் ப. ஜீவானந்தம் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. இதில் எம். எஸ். மாதேஸ்வரன், ஏழுமலை, அன்பு, நேரு, வேடியப்பன், ரமேஷ், சிவா, ஙி. ராஜா மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர்.

**நெல்லை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நெல்லை சந்திப்பு பாலன் இல்லத்தில், ஜீவா நினைவு நாளில் மலர் அஞ்சலி மற்றும் வீரவணக்கம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் ஆர் சடையப்பன், ஏ ஐ டி யு சி மாவட்ட துணை தலைவர் ஆர். ரெங்கன், மாவட்ட துணைச் செயலாளர் நண்பா முத்துகிருஷ்ணன், மாவட்ட அலுவலக செயலாளர் ஏ.முத்து கிருஷ்ணன், மாவட்ட குழு உறுப்பினர் பொ. கிருஷ்ணன் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** இராஜபாளையம் நகரில் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மன்றம் முன்பு வீரவணக்கம் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வி.ரவி, நகரச்செயலாளர் பி.கே. விஜயன், நகரப் பொருளாளர் ஆர்.முருகேசன், துணைச்செயலாளர் வேல்சாமி, கிளைச் செயலாளர் இ.குமார் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

**நாகை:** நாகை மாவட்டம்,வேதாரணத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் புயல் குமார் தலைமை வகித்தார்.மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி,வேதாரண்யம் கிளைச் செயலாளர் தங்க.குழந்தைவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில்,நல்லாசிரியர் விருது பெற்ற வீ.வைரக்கண்ணு,தஞ்சை ராமசுப்பிரமணியன், சமூக ஆர்வலர் ராசேந்திரன்,கவிஞர் லெ.பக்கிரசாமி உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

**திருவாரூர்:** தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் திருவாரூர் கிளையின் சார்பாக திருவாரூர் பழைய பேருந்து நிலையம் திரு.வி.க சிலை முன்பு கலை இலக்கியப் பெருமன்றத் தலைவர் எம்.நாகராஜன் தலைமையில் கலை இலக்கிய மாவட்டக்குழு உறுப்பினர்கள் கே.பாலதண்டாயுதம், கே.குணசேகரன் முன்னிலையில் நகரமன்ற உறுப்பினர் ஜி.வரதராஜன் ஜீவா படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.


குமரி


செங்கல்பட்டு


திருச்சி மாநகர்


திருவண்ணாமலை

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற செயலர் வீ.தர்மதாஸ் சிறப்புரையாற்றினார். மக்கள் அதிகாரம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சண்முகசுந்தரம் நன்றி கூறினார்.

**கரூர்:** கரூர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் கரூர் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன் தலைமையில் நடைபெற்றது.முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம் மாவட்ட துணைசெயலாளர் கே.சண்முகம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.லட்சுமி காந்தன், மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ்.பாலகிருஷ்ணன், ஜிபிஎஸ்.வடிவேலன், ஆர்.தங்கவேல் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டு நினைவஞ்சலி செலுத்தினர்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள கட்சி அலுவல வளாகத்தில் புகழ் அஞ்சலி நடைபெற்றது நிகழ்விற்கு போக்குவரத்துஏஐடியூசி சங்க மாநில துணை செயலாளர் த.இந்திரஜித், புகழ் அஞ்சலி உரையாற்றினர் . சி.பி.ஐ. நகர குழு உறுப்பினர்கள் நல்லுசாமி, சௌகத்அலி, ரகமத்துனிஷா , ஒன்றிய துணை செயலாளர் ராஜேந்திரன், ஜனசக்தி உசேன், போக்குவரத்து கழக சுந்தர்ராஜ் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட துணைச் செயலாளர் சி. செல்வகுமார் தலைமையில் புகழஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் எஸ். சிவா முன்னிலை வகித்தார். மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம். செல்வராஜ் சிறப்புரையாற்றினார். இதில் ஏஐடியுசி பொதுச் செயலாளர் க. சுரேஷ், தலைவர் நடராஜா, கட்சி மாவட்ட பொருளாளர் சண்முகம், புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி, விவசாய சங்க மாவட்ட செயலாளர் அயிலை. சிவசூரியன், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில தலைவர் க.இப்ராகிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு பகுதி குழுவிற்கு உட்பட்ட வண்ணாரப்பேட்டை பகுதியில் புதிய கட்சி கிளை அமைக்கப்பட்டது. இதற்கு கிளைச் செயலாளர் பல்கீஸ் சுவேதா தலைமை வகித்தார். கட்சிக்கொடியை மாவட்ட செயலாளர் எஸ்.சிவா ஏற்றி வைத்தார். ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ் சிறப்புரை ஆற்றினார். பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ் முத்துசாமி நன்றி கூறினார்.

மேலும் மேற்கு பகுதி குழுவில் சார்பில் 2 இடங்களிலும், கலை இலக்கிய பெருமன்றத்தின் சார்பில் ஒரு இடத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

**அரியலூர்:** அரியலூர் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் ஜி.தண்டபாணி, ஒன்றிய செயலாளர் ராயதுரை. ஒன்றிய துணைச்செயலாளர் ந.கோவிந்தசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் தருமபுரி மாவட்டக்குழு சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு வணங்காமுடி தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் கே.மணி,விதொச மாநில செயலாளர் ஜெ.பிரதாபன்,நிர்வாகிகள் செல்வம், மனோகரன், முருகேசன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செய்தனர்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்ட குழு சார்பில் தாம்பரம் ஜிஎஸ்டி சாலையில் அமைந்துள்ள ஜீவா திருவுருவ சிலைக்கு மூத்த தோழர் எல்.மேகநாதன் தலைமையில் கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் ஜீஆர்.இரவிந்திரநாத் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாநில குழு உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, மாவட்ட செயலாளர் ஏ. ராஜ்குமார், மாவட்ட துணை செயலாளர் இ.பாலாஜி, விதொச மாவட்ட தலைவர் பி.எஸ்.எல்லப்பன், திமுக பிரமுகர் மு.ஆதிமாறன், கலை இலக்கிய பெருமன்றத்தின் தேசிய தலைவர் டி.எஸ். நடராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் தொகுதி செயலாளர் தோழர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**குமரி:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் பேராசான் ஜீவா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, போதை ஒழிப்பு விழிப்புணர்வு இரு சக்கர வாகன பேரணி மற்றும் பிரச்சார இயக்கம் முன்னெடுக்கப்பட்டது. கன்னியாகுமரியில் தொடங்கிய பிரச்சார இயக்கத்துக்கு குமரி மாவட்ட செயலாளர் கே.சஜேஷ் தலைமை வகித்தார். மாவட்டத்தலைவர் வி. கிருஷ்ண குமார் முன்னிலை வகித்தார். பேரணியை ஏ.ஐ.டி.யு.சி.யின் மாநில செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

பேரணியை வாழ்த்தி கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், கலை இலக்கிய பெருமன்ற மாநிலத்தலைவர் எஸ்.கே.கங்கா, முற்போக்கு பேரவையின் மாநிலதுணைத்தலைவர் பேராசிரியர் சுந்தரம், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் செல்வராணி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.பேரணி குமரி மாவட்டத்தின் முக்கிய வீதிகள் வழியாக அண்ணா விளையாட்டரங்கம் முன் உள்ள ஜீவா சிலையை வந்தடைந்தது. நிகழ்வில் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எஸ்.அனில்குமார்,சுரேஷ் மேசியதால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜீவா சிலைக்கு ஏ.ஐ.டி.யு.சியின் மாநில செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க.பாரதி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பேரணியை நிறைவு செய்யும் நிகழ்வில் பூதப்பாண்டி பஞ்சாயத்து துணைத்தலைவர் எஸ்.அனில்குமார் தலைமை தாங்கினார். அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி நிறைவுரையாற்றினர். ஏராளமான இளைஞர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் காருபாறையில் 48ம் ஆண்டு பொங்கல் விழாவும் மக்கள் தலைவர் பேராசான் ஜீவா விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.பொங்கல் விழா நிகழ்விற்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அருணாசலம் தலைமை தாங்கினார்.விழாவை கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலத்தலைவர் எஸ்.கே.கங்கா அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் தா.முருகன், காருபாறை கிளையின் மூத்த தோழர் நாராயணபெருமாள், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலதுணைத்தலைவர் கவிஞர் கண்மணி ராசா ஆகியோர் பாராட்டி பேசினர். நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் குமரி மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.அனில்குமார் ஜி.சுரேஷ் பேசியதாஸ், நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்துதமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற முன்னாள் மாநிலத்தலைவர் சி.சொக்கலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சை தெற்கு:** தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்ற நிகழ்வில் மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர் தலைமை வகித்தார். நிகழ்வில், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சி.சந்திரகுமார், வெ.சேவையா, மாநகர துணைச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பாசிச பாஜகவிடமிருந்து கல்வியைப் பாதுகாத்திட டெல்லியில் இந்தியா கூட்டணி மாணவர் அமைப்புகள் போராட்டம்!

தேசிய அளவில் ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கையை எதிர்த்துப் போராட, பாசிச பிஜேபியிடம் இருந்து கல்வித்துறையை பாதுகாத்திட அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், இந்திய மாணவர் சங்கம், என் எஸ் யு ஐ, திமுக, சமஜ்வாதி, ஆர் ஜே டி, ஆம் ஆத்மி கட்சிகளின் மாணவர் அமைப்புகள் உள்ளிட்ட 16க்கும் மேற்பட்ட இடதுசாரி, ஜனநாயக மாணவர் அமைப்புகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டது யுனைடெட் ஸ்டுடென்ட்ஸ் ஆப் இந்தியா என்கிற கூட்டமைப்பு.

இக்கூட்டமைப்பின் சார்பில் கல்வியை பாதுகாப்போம், தேசிய கல்விக் கொள்கையை நிராகரிப்போம், இந்தியாவை பாதுகாப்போம், பிஜேபியை நிராகரிப்போம் என்கிற முழக்கத்தோடு ஜனவரி 12ஆம் தேதி நாடாளுமன்ற பேரணி நடைபெற்றது.

இந்திய மாணவர் சங்கத்தின் தேசிய தலைவர் வி.பி.ஷானு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் பொதுச்செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், திமுக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி எழிலரசன் எம் எல் ஏ, இந்திய மாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் மையூக் பிஸ்வாஸ் உள்ளிட்ட 16 அமைப்புகளின் நிர்வாகிகளும் உரையாற்றினர். அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தேசிய துணைத் தலைவர் சங்கமித்ரா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மாணவர் பெருமன்றத்தின் தேசிய பொருளாளர் விராஜ் தேவங் நன்றி கூறினார்.




ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பெருந்திரளாக பேரணியில் கலந்து கொண்டனர். தேசிய கல்விக் கொள்கையை திரும்பப் பெறு, நீட் கியூட் தேர்வுகளை ரத்து செய், மாணவர் பேரவை தேர்தல்களை முறையாக நடத்திடு, பட்டியலின பழங்குடியின பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாத்திடு, கல்வி வளாகங்களில் சாதி மத பாகுபாடுகளை தடுத்திட ரோஹித் வெமுலா பெயரில் புதிய சட்டத்தை நிறைவேற்று, பகத்சிங் தேசிய வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு சட்டத்தை நிறைவேற்று, அக்னிவீர் திட்டத்தை ரத்து செய், அக்னிவீர் திட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்திய அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் பீகார் மாநிலச் செயலாளர் ரோஷன்குமார் சின்கா உள்ளிட்ட அனைவரையும் விடுதலை செய் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# மகாத்மாவை அவமதிக்கும் ஆளுநர் பேச்சுக்கு இரா.முத்தரசன் கண்டனம்!

மகாத்மாவை அவமதிக்கும் ஆளுநர் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

நாட்டின் புகழார்ந்த விடுதலைப் போராட்ட வரலாற்றில் தனி முத்திரை பதித்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 127வது பிறந்த நாள் விழாவை நாடு கொண்டாடி வருகிறது.

சென்னையில் அண்ணா பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த நாள் நிகழ்வுக்கு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அழைக்கப்பட்டுள்ளார். விழாவில் பங்கேற்று பேசிய ஆர்.என்.ரவி, விடுதலை போராட்ட காலத்திலேயே, நாட்டு மக்கள் தேசத்தின் தந்தையாக ஏற்றுக் கொண்ட மகாத்மா காந்தி மீது அவதூறு பரப்பும் மலிவான செயலில் ஈடுபட்டுள்ளார்.

படித்த பண்டிதர்கள் ஆண்டுக்கு ஒரு முறை கூடி, காலனி ஆட்சி அதிகாரத்தில் பங்கும், ஆங்கிலேயர்கள் பார்த்து வந்த அரசு வேலைகளில் ஒதுக்கீடும் கேட்டு வந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை மக்கள் தளத்திற்கு மாற்றி, மாபெரும் இயக்கங்களை முன்னெடுக்க வழிகாட்டியவர். பல வடிவங்களில் நடந்து வந்த விடுதலைப் போராட்டத்தை அஹிம்சை பாதைக்கு மாற்றி, கோடானு கோடி மக்கள் பங்கேற்கும் பேரியக்கமாக மாற்றுவதில் வெற்றி கண்டவர்.

ஈஸ்வர் அல்லா தேரே நாம், சப்கோ ஷன் மதி தே பகவான் என ஓயாமல் முழங்கி, வேற்றுமையில் ஒற்றுமை காணும் மரபு வளர்த்ததில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்தவர். இந்து முஸ்லிம் ஒற்றுமையை தனது உயிருக்கும் மேலாக கருதி வாழ்ந்து வந்தவர்.

மதவெறிக்கு குறிப்பாக பெரும்பான்மை மதவெறிக்கு எதிராக சமரசம் காணமல் போராடியவர், கோட்சே என்ற மத வெறியனின் துப்பாக்கி குண்டுகளை

நெஞ்சில் தாங்கி அன்னை நாட்டின் மண்ணில் ரத்தம் சிந்தி, உயிர் துறந்தவர்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களும் தலைவராக ஏற்றுக் கொண்ட மகாத்மா காந்தியை அவருக்கு எதிராக நிறுத்தும் நாக்பூர் குரு பீடத்தில் பிரித்தாளும் புத்தியை ஆளுநர் ஆர்.என்.ரவி விஷமத்தனத்துடன் வெளிப்படுத்தியுள்ளார்.

விடுதலைப் போராட்டத்தில் வினாடியும் பங்கேற்காத, மதவெறி, சனாதனக் கும்பலின் குரலை ஆளுநர் ஆர்.என்.ரவி எதிரொலித்திருப்பதை நாடு ஒரு போதும் ஏற்காது.

தமிழ்நாட்டின் அரசியல் களத்தில் சர்ச்சைகளை உருவாக்கும் முரண்பாடுகளை முன் வைத்து அரசியல் ஆதாயம் தேடும் ஆர்.என்.ரவியின் மலிவான பேச்சை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது என்று தனது அறிக்கையில் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

# கோவிலுக்குப் போகாதே!

**- மகாகவி ரவீந்திரநாத் தாகூர்**

கடவுளின் பாதத்தில்
மலர் வைப்பதற்காக
கோவிலுக்குப் போகாதே!
உன் வீட்டை முதலில்
அன்பின் நறுமணத்தால்
நிரப்பு!.

கடவுளின் பீடத்தில்
தீபங்களை ஏற்றி வைக்க
கோவிலுக்குப் போகாதே!
முதலில் உன்
இதயத்தில் அடர்ந்திருக்கும்
பாவச் செயல், பெருமிதம்,
தன்னகங்கார இருளை
வழித்தெறி!


பிரார்த்தனைகளின் போது
தலை கவிழ்ப்பதற்காக
கோவிலுக்குப் போகாதே!
முதலில் சக மனிதர்களை
பணிந்து வணங்கிடப்
பாடம் படி!

யாருக்கு தவறிழைத்தாயோ
அவர்களிடம் சென்று
மனமுருகி மன்னிப்புக் கேள்!
முட்டி மடக்கி மண்டியிட்டு
வழிபாடு செய்வதற்காக
கோவிலுக்குப் போகாதே!
கீழே மிதிபட்டுக் கிடப்போரை
கைகொடுத்து தூக்கிவிட
உன்னுடல் முதலில் குனியட்டும்!

முளைத்த இளந்தளிர்களுக்கு
உன் துணையால் வலிமை
சேர்!
நசுக்காதே!

உனது தீய செயல்களுக்காக
பாவமன்னிப்பு வேண்டி
கோவிலுக்குப் போகாதே!
யாரெல்லாம் உன்னைக்
காயப்படுத்தினரோ
மனதார அவர்களை
மன்னித்துவிடு!

**- தமிழில் டி எம் மூர்த்தி**



Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday

## ஜனவரி 23ல் விவசாய தொழிலாளர் நல வாரியம் கோரி

# வி.தொ.ச மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம்!







தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஜனவரி 23 ஆம் நாளன்று 120 க்கும் மேற்பட்ட மையங்களில் பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

**திருவாரூர்** மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. பழனிச்சாமி, கே. உலகநாதன் தலைமையிலும், கோட்டூர் ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து தலைமையிலும்,

**வேலூர்** மாவட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லதா தலைமையிலும், ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் தலைமையிலும் நடைபெற்றது.

**கிருஷ்ணகிரி** மாவட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் டி இராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் சங்கத்தின் மாநில தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நா பெரியசாமி தலைமையிலும்,

**தஞ்சை வடக்கு** மாவட்டம் அம்மாபேட்டையில் சங்கத்தின் பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் தலைமையிலும், தஞ்சை தெற்கு மாவட்டம் ஒரத்தநாட்டில் சங்கத்தின் மாநில பொருளாளர் சி சந்திரகுமார் தலைமையிலும் பெருந்திரள ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**தென்காசி** மாவட்டத்தில் தென்காசி, செங்கோட்டை, கடையநல்லூர், வாசுதேவநல்லூர், ராயகிரி, சிவகிரி, திருவேங்கடம், சங்கரன்கோவில் ஆகிய ஒன்பது மையங்களில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளரும், மாவட்டத் துணைச் செயலாளரும், விவசாய தொழிலாளர்சங்க தோழர்களும் கலந்து கொண்டனர்.

**திருவள்ளூர்** மாவட்டம் திருவாலங்காடு ஒன்றிய அலுவலகத்தின் எதிரே மாவட்ட துணைத் தலைவர் சி.சுப்பிரமணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் டி.கே. ராஜா, மாவட்ட செயலாளர் என்.எஸ். பிரதாப் சந்திரன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன் ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து உரையாற்றினார்.

**கிருஷ்ணகிரி** பேருந்துநிலையம் அருகில் விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் எஸ். கண்ணு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை தலைவர் என்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்ட பொருளாளர் ஜி.ஆர்.சக்கரவர்த்தி, கட்சியின் மாவட்ட துணை செயலாளர் பி. சின்னசாமி, மாவட்ட செயலாளர் ஆர். சேகர் போராட்டத்தை விளக்கி பேசினார்.

**புதுக்கோட்டை** மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஜெயில் கார்னரில் விதொச மாவட்ட செயலாளர் ஏ. ரங்கராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்ட செயலாளர்கள் தா. செங்கோடன் நிறைவுறையாற்றினார்.

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் பேருந்து நிலையம் அருகில் வி.தொ.ச. மாவட்டத் துணைச் செயலாளர் தா.செல்வகுமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**நாகப்பட்டினம்** மாவட்டத்தில் பல்வேறு மையங்களில் நடைபெற்றது. நாகப்பட்டினம் ஒன்றியத்தில் நீதிராஜன், கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. சிவகுரு பாண்டியன் கண்டனவுரையாற்றினார்.

வேதாரண்யம் ஒன்றியத்தில் எஸ்.இளவரசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எம்.ஏ.செங்குட்டுவன், காசி.அருள்ஒளி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அ.பாலகுரு கண்டனவுரையாற்றினார்.

தலைஞாயிறு ஒன்றியம், திருமருகல் ஒன்றியம், கீழ்வேளுர் ஒன்றியம் ஆகிய இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**வேலூர்** மாவட்டம் குடியாத்தம் நகரில் தாலுக்கா அலுவலகத்திற்கு எதிரில் நடைபெற்றது. ஆர்பாட்டத்திற்கு விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கே சி பிரேம்குமார் தலைமை தாங்கினார். சிபிஐ மாநில குழு உறுப்பினர் எல்.மணி, சிபிஐ வேலூர் மாவட்ட துணை செயலாளர் துரை செல்வம், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கோவை** மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகிலுள்ள பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பாக மாவட்ட பொறுப்பாளர் ஆர் துரைசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு முன் தமிழ்நாடு செயலாளரும் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினருமான எம். ஆறுமுகம் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி சிவசாமி, ஏ ஐ டி யு சி மாவட்ட பொதுச் செயலாளர் சி தங்கவேல் ஆகியோர் உரையாற்றினர்.

**காஞ்சிபுரம்** ஒன்றியத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் தலைமை தாங்கினார். வி சரஸ்வதி. எஸ் ராமமூர்த்தி. வி ரூபாவதி. எஸ் கோமளா முன்னிலை வகித்தனர்.

**ஈரோடு வடக்கு** மாவட்டம் சத்தியமங்கலம், சிக்கரசம்பாளையம், புளியம்பட்டி பவானிசாகர் பவானி ஆகிய 5 மையங்களில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சத்தியமங்கலத்தில் ஏ ஐ டி யு சி தொழிற்சங்க தலைவர் ஆர்.ஸ்டாலின் சிவகுமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் எஸ்.சி. நடராஜ், ஐ.எஸ்.சிவராஜ் சி.ரவிச்சந்திரன்,

சிக்கரசம்பாளையத்தில் விசுரேந்தர், சி கே முருகன் எம்.சரவணகுமார் ஜெ.லட்சுமி முத்துக்குமார், சுரேஷ்,

பவானிசாகரில் பி.ஏ.வேலுமணி, பூங்கொடி, பால்ராஜ், சுகன்யா, ஜேசுராஜ் புளியம்பட்டியில் பி.என்.ராஜேந்திரன், எஸ் மகேந்திரன்,

பவானியில் டி.ஏ. மாதேஸ்வரன், கந்தசாமி, அருள், சிவராமன் கண்ணன் உள்ளிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பிகேஎம்யு சங்க நிர்வாகிகள் பங்கேற்று கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

**மயிலாடுதுறை** மாவட்டத்தில் எஸ்.சி.கணபதி மாவட்ட செயலாளர் தலைமையில் நடைபெற்றது. கோரிக்கை விளக்க உரை அ.சீனிவாசன் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் இதில் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சை வடக்கு,** அம்மாபேட்டை தலைமைதபால்நிலையம் முன்பு மாவட்டத் தலைவர் க. சுந்தரராஜன் தலைமையிலும் ஒன்றிய தலைவர் கோ.பழனிச்சாமி, எம் சின்னராஜா முன்னிலையிலும் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் கலந்து கொண்டு கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

**தருமபுரி** வட்டாச்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய தலைவர் ஜி ராஜகோபால் தலைமைவகித்தார், ஒன்றிய செயலாளர் ஜி பச்சாகவுண்டர் முன்னிலை வகித்தார் ஆர்ப்பாட்டத்தை மாவட்ட பொதுச்செயலாளர் கே மணி துவக்கி வைத்தார் கோரிக்கைகளை விளக்கி சங்க மாவட்ட செயலாளரும் எஸ் தேவராசன், சங்க மாநில செயலாளர் மாவட்ட தலைவர் ஜெ பிரதாபன் உள்ளிட்ட விவசாய தொழிலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

நல்லம்பள்ளி வட்டாச்சியர் அலுவலகம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய பொ தலைவர் எல்சி கிருஷ்ணன், இன்டூர் வட்டார தலைவர் மாதையன்தலைமை வகித்தனர்.

ஒன்றிய செயலாளர் என் முருகேசன் ஒன்றிய பொருளாளர் ஆர் மல்லையன் ஆகியோர முன்னிலை வகித்தனர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எம் மாதேஸ்வரன் அவர்கள் துவக்கிவைத்தார் சங்க மாநில செயலாளர் ஜெ பிரதாபன் கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

**கள்ளக்குறிச்சி** மாவட்ட தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் பெருந்திரள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் கே.எஸ் அப்பாவு தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் முருகேசன், மாவட்டத் துணைச்செயலாளர் ரீத்தா, மாவட்டத் துணைத் தலைவர் கே. கபில் தேவ் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் கே. ராமசாமி, ஏ ஐ டி யு சி மாநில நிர்வாக குழு ஆ.வளர்மதி ஆகியோர் உரையாற்றினர்.













Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **S.Shanmuganathan** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.